# யோசுவாவின் புத்தகம்

பாடம் 3

கோத்திர மரபுரிமைகள்

Manuscript

thirdmill

Biblical Education. For the World. For Free.

© 2021 by Third Millennium Ministries

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன. இந்த வெளியீட்டின் எந்த பகுதியும் Third Millennium Ministries,Inc. 316 Live Oaks Blvd., Casselberry, Florida 32707. இன் வெளியீட்டாளரினுடைய எழுத்துப்பூர்வ அனுமதியின்றி எந்தவொரு வடிவத்திலும் அல்லது லாபத்திற்கான எந்த வகையிலும் மீண்டும் உருவாக்கப்படக் கூடாது. மதிப்பாய்வுக்கோ, கருத்து தெரிவிக்கவோ அல்லது ஆழ்ந்த அறிவுத்திறன் சம்பந்தப்பட்ட நோக்கங்களுக்காகவோ சுருக்கமான மேற்கோள்களாக எடுக்கப்படலாம்.

சுட்டிக்காட்டப்படாவிட்டால் எல்லா வேத மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து வந்தவை, The Bible Society of India Version Tamil-O.V. (New Orhto), copyright © 2018 . அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

## THIRDMILL ஊழியத்தைப் பற்றி

1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த Thirdmill ஒரு இலாப நோக்கம் இல்லாத சுவிசேஷ மார்க்க கிறிஸ்தவ ஊழியமாகும்.

**வேதாகம கல்வி. உலகத்திற்காக. இலவசமாக.**

ஊழியத்திற்கு போதுமான பயிற்சி இல்லாத உலகெங்கிலும் உள்ள நூறாயிரக்கணக்கான போதகர்கள் மற்றும் கிறிஸ்தவ தலைவர்களுக்கு இலவச கிறிஸ்தவ கல்வியை வழங்குவதே எங்கள் குறிக்கோளாகும். ஆங்கிலம், அரபு, மாண்டரின், ரஷ்ய மற்றும் ஸ்பெயின் நாட்டு மொழிகளில் இணையற்ற பல்லூடகவியல் பாடசாலை பாடத்திட்டத்தை உருவாக்கி உலகளவில் விநியோகிப்பதன் மூலம் இந்த இலக்கை அடைகிறோம். எங்கள் பாடத்திட்டம் எங்கள் கூட்டு ஊழியங்கள் மூலம் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்படுகிறது. இந்த பாடத்திட்டத்தில் வரைகலை மூலம் இயக்கப்படும் காணொளி காட்சிகள், அச்சிடப்பட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் இணைய வழி கல்வி உபகரணங்கள் உள்ளன. இது இணைய வழியாகவும் நேரடியான கல்வி நிலையங்கள் மூலமாகவும் கற்றுக்கொடுப்பதற்கு  பள்ளிகள், குழுக்கள் மற்றும் தனிநபர்களால் பயன்படுத்தப்படும் பொருட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக, மிகச்சிறந்த உள்ளடக்கம் மற்றும் தரத்திற்கான விருது பெற்ற பல்லூடகவியல் பாடங்களை உருவாக்கும் அதிக செலவு குறைந்த முறையை நாங்கள் உருவாக்கியுள்ளோம். எங்கள் எழுத்தாளர்கள் மற்றும் தொகுப்பாளர்கள் இறையியல் ரீதியாக பயிற்சி பெற்ற கல்வியாளர்கள் ஆவர், எங்கள் மொழிப் பெயர்ப்பாளர்கள் அவர்களின் சொந்த மொழிகளில் இறையியல் புலமை பெற்றவர்கள், மற்றும் எங்கள் பாடங்களில் உலகெங்கிலும் உள்ள நூற்றுக்கணக்கான மரியாதைக்குரிய பாடசாலை பேராசிரியர்கள் மற்றும் போதகர்களின் நுண்ணறிவு உள்ளது. இதனோடு கூட,

எங்கள் வரைகலை வடிவமைப்பாளர்கள், விளக்குபவர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் அதிநவீன உபகரணங்கள் மற்றும் நுட்பங்களைப் பயன்படுத்தி மிக உயர்ந்த உற்பத்தித் தரங்களை வழங்குகின்றனர்.

எங்கள் விநியோக இலக்குகளை நிறைவேற்றுவதற்காக, Thirdmill ஊழியமானது சபைகள், பாடசாலைகள், வேதாகம பள்ளிகள், மிஷனரி ஊழியர்கள், கிறிஸ்தவ ஒளிபரப்பாளர்கள் மற்றும் செயற்கைக்கோள் தொலைக்காட்சி வழங்குநர்கள் மற்றும் பிற அமைப்புகளுடன் திறம் சார்ந்த கூட்டாண்மைகளை உருவாக்கியுள்ளது. இந்த உறவுகள் ஏற்கனவே தனியாக ஊழியம் செய்கிற தலைவர்கள், போதகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு எண்ணற்ற காணொளி பாடங்களை விநியோகித்துள்ளன. எங்கள் வலைத்தளங்கள் விநியோகத்திற்கான வழிகளாக உள்ளன. மேலும் உங்கள் சொந்த கற்றல் சமூகத்தை எவ்வாறு தொடங்குவது என்பதற்கான பாட உபகரணங்களையும் எங்கள் பாடங்களுக்கு கூடுதல் உபகரணங்களையும் வழங்குகின்றன.

Thirdmill ஊழியம் IRS என்கிற அமைப்பினால் 501(c)(3) கழகமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. சபைகள், நிறுவனங்கள், வணிகங்கள் மற்றும் தனிநபர்களின் தாராளமான, வரி விலக்கு பெற்ற பங்களிப்புகளை நாங்கள் சார்ந்து இருக்கிறோம். எங்கள் ஊழியத்தைப் பற்றிய கூடுதல் தகவலைப் பெறுவதற்கும் நீங்கள் எவ்வாறு ஈடுபடலாம் என்பதை அறிவதற்கும் தயவுசெய்து www.thirdmill.org. யைப் பார்வையிடவும்.

# பொருளடக்கம்

முன்னுரை ........ 1
ஆரம்ப எல்லைகள் ........ 2
அமைப்பும் உள்ளடக்கமும் ........ 3
யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள எல்லைகள் ........ 4
யோர்தானுக்கு கிழக்கில் உள்ள எல்லைகள் ........ 4
அசல் அர்த்தம் ........ 5
தெய்வீக அதிகாரம் ........ 6
தேவனுடைய உடன்படிக்கை ........ 6
மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் தரநிலை ........ 7
தேவனின் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி ........ 8
அனைத்து இஸ்ரவேலரும் ........ 8
குறிப்பிட்ட ஒதுக்கீடுகள் ........ 9
அமைப்பும் உள்ளடக்கமும் ........ 10
தொடக்க சுருக்கம் ........ 11
நிறைவு சுருக்கம் ........ 12
யூதா ........ 12
எப்பிராயீம் / மனாசே ........ 13
சிறு கோத்திரத்தார் ........ 14
லேவி ........ 15
அசல் அர்த்தம் ........ 16
தெய்வீக அதிகாரம் ........ 16
தேவனுடைய உடன்படிக்கை ........ 17
மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் தரநிலை ........ 17
தேவனின் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி ........ 18
அனைத்து இஸ்ரவேலரும் ........ 19
தேசிய ஒற்றுமை ........ 20
அமைப்பும் உள்ளடக்கமும் ........ 21
பலிபீடம் கட்டுதல் ........ 21
போர் அச்சுறுத்தல் ........ 22
மோதல் ........ 22
அச்சுறுத்தல் நிறுத்தம் ........ 22
பலிபீடத்தின் பெயரிடல் ........ 22
அசல் அர்த்தம் ........ 23



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தெய்வீக அதிகாரம் .......... 23
தேவனுடைய உடன்படிக்கை .......... 24
மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் தரநிலை .......... 24
தேவனின் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி .......... 25
அனைத்து இஸ்ரவேலரும் .......... 26
**கிறிஸ்தவ பயன்பாடு .......... 26**
**ராஜ்யத்தின் தொடக்கம்** .......... 27
**ராஜ்யத்தின் தொடர்ச்சி** .......... 30
**ராஜ்யத்தின் நிறைவு** .......... 31
**முடிவுரை .......... 33**



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# முன்னுரை

ஒரு பெரிய குடும்பத் தொழிலின் தலைவர் வயதானபோது, தனது ஐந்து மகன்களும் பொறுப்பேற்க வேண்டிய நேரம் இது என்று அவர் தீர்மானித்தார். எனவே, தந்தை தனது மகன்களை மத்திய அலுவலகத்தில் கூட்டி, ஒவ்வொருவருக்கும் நிறுவனத்தில் சட்டப்பூர்வ பங்குகளை ஒப்படைத்து வரிசையில் வைத்தார். "நீங்கள் ஒவ்வொருவரும் இப்போது வணிகத்தின் ஒரு பகுதியை வைத்திருக்கிறீர்கள்," என்று அவர் கூறினார். "நீங்கள் அனைவரும் உங்கள் பொறுப்புகளை எடுத்து முன்பை விட அதிகமாக வேலை செய்ய வேண்டும்" என்றார்.

பல வழிகளில், யோசுவா முதிர்வயதானபோது இஸ்ரவேல் கோத்திரத்தாரின் விஷயத்தில் அதையே செய்தார். அவர் இல்லாமல் அவர்கள் முன்னேற வேண்டிய நேரம் இது என்று அவருக்குத் தெரியும். எனவே, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் அவர் சுதந்தரங்களைக் கொடுத்தார், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அவர்கள் ஒன்றுசேர்ந்து வேலை செய்ய அழைப்பு விடுத்தார்.

யோசுவாவின் புத்தகம் பற்றிய நமது தொடரின் மூன்றாவது பாடம் இதுவாகும், இந்த பாடத்தில் இஸ்ரவேலின் "கோத்திர சுதந்தரிப்புகள்" பற்றி பார்ப்போம். யோசுவாவின் இரண்டாம் பெரும் பிரிவு இஸ்ரவேல் மக்களை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் சுதந்தரவாளிகளாக ஒன்றாக வாழ எவ்வாறு அழைத்தது என்பதை நாம் பார்ப்போம்.

நம்முடைய முந்தைய பாடத்தில், யோசுவாவினுடைய புத்தகத்தின் அசல் அர்த்தத்தை இந்த வழியில் சுருக்கமாகக் கூறினோம்:

> யோசுவாவின் நாளில் இஸ்ரவேலின் வெற்றி, கோத்திர சுதந்தரம் மற்றும் உடன்படிக்கை விசுவாசம் ஆகியவற்றைப் பற்றி பிற்கால தலைமுறையினர் எதிர்கொள்ளும் இதே போன்ற சவால்களை எதிர்கொள்ள யோசுவாவின் புத்தகம் எழுதப்பட்டது.

யோசுவாவின் நாளைப் போலவே, ஆரம்ப வாசகர்கள் தங்கள் எதிரிகளைத் தோற்கடிப்பது, தங்கள் கோத்திர சுதந்தரங்களைப் பாதுகாப்பது, தேவனுக்கு தங்கள் உடன்படிக்கையின் உண்மைப் பற்றுறுதியைப் புதுப்பிப்பது போன்ற சவால்களை எதிர்கொண்டனர். எனவே, இந்த ஒவ்வொரு பகுதியிலும் தனது அசல் வாசகர்களுக்கு வழிகாட்ட நமது ஆசிரியர் தனது புத்தகத்தை எழுதினார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்த நோக்கத்தை நிறைவேற்ற, நமது புத்தகம் மூன்று முக்கிய பிரிவுகளாக விரிவடைகிறது: அவையாவன: 1-12 அதிகாரங்களில் இஸ்ரவேலின் வெற்றிகரமான சுதந்தரிப்பு, 13-22 அதிகாரங்களில் இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரம், மற்றும் 23,24 அதிகாரங்களில் இஸ்ரவேலின் உடன்படிக்கை விசுவாசம். இந்த பாடத்தில், நமது புத்தகத்தின் இரண்டாவது பெரிய பிரிவான இஸ்ரவேலுக்கு ஒதுக்கப்பட்ட கோத்திர சுதந்தரங்களை ஆராய்வோம்.

பெரிய அளவில், யோசுவாவின் இந்த பிரிவு மூன்று முக்கிய படிகளைக் கொண்டுள்ளது. இது 13:1-14 இல் இஸ்ரவேலின் சுதந்தரத்தினுடைய ஆரம்ப எல்லைகளுடன் தொடங்குகிறது. பின்னர் அது 13:15–21:45-ல் இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட பரம்பரை ஒதுக்கீடுகளுக்கு நகர்கிறது. 22:1-34 இல் யோசுவாவின் நாட்களில் இஸ்ரவேலின் தேசிய ஒற்றுமையை மையமாகக் கொண்ட ஒரு கதையுடன் இது முடிவடைகிறது.

இந்த உருவரையைப் பின்பற்றி, இந்த மூன்று படிகளில் ஒவ்வொன்றையும் பார்ப்பதன் மூலம் இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களை ஆராய்வோம். நமது புத்தகத்தின் இந்த பகுதியினுடைய கிறிஸ்தவ பயன்பாடு குறித்த சில பிரதிபலிப்புகளுடன் முடிப்போம். முதல் படியுடன் ஆரம்பிக்கலாம்: இஸ்ரவேலினுடைய சுதந்தரத்தின் ஆரம்ப எல்லைகள்.

# ஆரம்ப எல்லைகள்

நாம் முந்தின பாடத்தில் பார்த்தபடி, யோசுவாவுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் பெரும் பகுதிகளை இஸ்ரவேலர் சுதந்தரித்திருந்தனர் என்பதை யோசுவாவின் ஆசிரியர் புரிந்துகொண்டார். இந்த சுதந்தரம் பூமியின் மீது மனிதகுலம் ஆதிக்கம் செலுத்துவதற்கான தேவனுடைய தொடர்ச்சியான அழைப்பின் ஒரு சிறப்பு பகுதியாக இருந்தது. ஆனால் நாம் பார்க்கப்போகும் படி, யோசுவாவின் நாட்களில், இஸ்ரவேலர்கள் தங்கள் முற்பிதாவான ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட அனைத்து நிலங்களையும் பெறவில்லை என்பதையும் நமது ஆசிரியர் அங்கீகரித்தார். மாறாக, தேவன் இஸ்ரவேலுக்கு அதன் ஒரு பகுதியில் ஒரு வலுவான இருப்பான ஒரு காலடியை மட்டுமே கொடுத்தார். ஆனால் நமது ஆசிரியரின் பார்வையில், இஸ்ரவேலின் ஒவ்வொரு தலைமுறையும் அந்த ஆரம்ப பரிசுத்த எல்லைகளுக்குள் இருந்த நிலங்களை அடையாளம் கண்டு பாதுகாக்க வேண்டியது அவசியம்.

இஸ்ரவேலின் ஆரம்ப எல்லைகளின் இந்த பதிவின் இரண்டு பரிமாணங்களைப் பார்ப்போம். முதலில், அதன் அடிப்படை கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை நாம் கவனிப்போம், இரண்டாவதாக, நாம் புத்தகத்தின் இந்த பகுதியின் அசல் அர்த்தத்திற்கு திரும்புவோம். முதலில் அதன் அமைப்பையும் உள்ளடக்கத்தையும் கவனிக்கலாம்.

## அமைப்பும் உள்ளடக்கமும்

யோசுவாவின் இந்த பகுதி இரண்டு அத்தியாயங்களாக பிரிகிறது. முதலாவதாக, 13:1-7 யோர்தான் நதிக்கு மேற்கே கானான் தேசமான யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள இஸ்ரவேலினுடைய தேசத்தின் எல்லைகளை மையமாகக் கொண்டுள்ளது. இரண்டாவதாக, 13:8-14 யோர்தான் நதிக்குக் கிழக்கே உள்ள பிரதேசங்களான யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியில் உள்ள இஸ்ரவேலினுடைய தேசத்தின் எல்லைகளில் கவனம் செலுத்துகிறது.

யோசுவாவின் இந்தப் பகுதியை நாம் அணுகும்போது, இஸ்ரவேலினுடைய சுதந்தரத்தின் எல்லைகளைப் பற்றிய ஒரு சிறிய பின்னணியை நாம் மனதில் கொள்ள வேண்டும். ஆதியாகமம் 15:18-21-ல், ஆபிரகாமின் சந்ததியினருக்கு ”எகிப்தின் நதி” யிலிருந்து மேற்கே விரிவடையும் ஒரு தேசத்தை தேவன் வாக்குறுதி அளித்தார். இந்த ”நதி” அல்லது ”ஒடை” இப்போது இல்லாத நைல் நதியின் கிழக்குக் கிளையாக இருக்கலாம் அல்லது நைல் நதிக்கு கிழக்கே இன்றும் இருக்கும் எல்-அரிஷ் ஆக இருக்கலாம். வடகிழக்கில், ஆபிரகாமின் தேசம் 'ஐபிராத்து என்னும் பெரிய நதி' வரையாக வரும். அங்கிருந்து, இஸ்ரவேல் தேவனுடைய ஆசீர்வாதங்களை பூமியின் எல்லைகள் வரை பரப்பும். ஆனால் உண்மையில், தாவீதினுடைய ராஜ்யத்தின் காலம் வரை இஸ்ரவேலின் தேசங்கள் இந்த எல்லைகளை அடையவில்லை. யோசுவாவின் காலத்தில், யோர்தானின் இருபுறமும் உள்ள இந்த பிராந்தியங்களின் முன்னறிவிப்பாக இஸ்ரவேலுக்கு ஒரு பகுதியை மட்டுமே தேவன் வழங்கினார். ஆனால் நம்முடைய புத்தகம் குறிப்பிடுகிறபடி, இந்த நாடுகளில் பாதுகாப்பாக குடியேறுவது இஸ்ரவேலுக்கு ஒரு முக்கியமான முதல் படியாக இருந்தது.

> ஆபிரகாமில் தொடங்கி, ஒரு மக்கள் வருவார்கள் என்றும், மக்கள் பூமிக்கு ஒரு ஆசீர்வாதமாக இருப்பார்கள் என்றும், முக்கிய பாத்திரங்களை ஆற்றுவார்கள் என்றும் தேவன் வாக்குறுதி அளித்தார். ஆனால் அவற்றில் ஒன்று, அவர் அவர்களுக்கு ஒரு நிலத்தைக் கொடுப்பார் என்பதாகும். இஸ்ரவேலர் யார் என்பதற்கு அதுவே முக்கியம். அவர்கள் இறுதியாக எகிப்தை விட்டு வெளியேறி அந்த நிலத்தைப் பெற்றபோது, அவர்கள் அதற்கு தகுதியற்றவர்கள் என்பதைப்

> புரிந்துகொண்டார்கள். அவர்கள் சம்பாதிக்காத, அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லாத கிரகத்தில் ஒரு இடத்தைப் பெறுவதற்கு தேவன் வழி வகுத்திருந்தார், ஆனால் அவர் தனது சொந்த வாக்குறுதியாலும் அதைச் செய்வதற்கான அவரது உறுதியான திட்டத்தாலும் அவர்களுக்குக் கொடுத்தார்.
>
> – Dr. டக்லஸ் ஸ்டுவர்ட்

## யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள எல்லைகள்

யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள எல்லைகளைப் பற்றிய முதல் அத்தியாயம் 12 ஆம் அதிகாரத்தில் யோசுவா கைப்பற்றிய பிராந்தியங்களின் பட்டியலை உருவாக்குகிறது. இது 13:1 இல் யோசுவா "வயதில் முதிர்ந்தவர்" என்றும், "இன்னும் சுதந்தரிப்பதற்கு நிறைய நிலம் மீதமிருந்தது" என்றும் தொடங்குகிறது. மீதியான தேசம் பெலிஸ்தரின் பகுதியிலும் கானான் நாட்டின் வடதிசைகளிலும் இருந்தது. "நான் அவர்களை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்துவேன்" என்று 13:6 இல் தேவன் வாக்களித்தார். எனவே, 7 ஆம் வசனத்தில், தேவன் யோசுவாவை முன்னோக்கிச் சென்று கானான் முழுவதையும் இஸ்ரவேலின் சுதந்தரமாக நடத்தும்படி கட்டளையிட்டார்.

## யோர்தானுக்கு கிழக்கில் உள்ள எல்லைகள்

இரண்டாவது அத்தியாயத்தில், 13:8-14 இல், நமது ஆசிரியர் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியில் உள்ள எல்லைகளில் வெளிப்புற எல்லைகளை விவரிப்பதன் மூலம் இஸ்ரவேலின் ஆரம்ப பரம்பரையின் வரைபடத்தை முடித்தார். மோசே இறப்பதற்கு முன்பு இந்த பகுதிகளை இஸ்ரவேலின் சுதந்தரமாக வழங்கினார் என்ற குறிப்புடன் நமது ஆசிரியர் 13:8 இல் தொடங்குகிறார்.

யோர்தானுக்குக் கிழக்கே இஸ்ரவேலின் ஆரம்ப கோத்திர சுதந்தரங்கள் தெற்கே மோவாப் வரையிலும் வடக்கே எர்மோன் மலை வரையிலும் பரவியிருந்தன. ஆனால் நமது ஆசிரியர் 13:13 இல் இஸ்ரவேலர் இன்னும் "கெசூரியர் மாகாத்தியர்" போன்ற சில குழுக்களை விரட்டவில்லை என்று குறிப்பிட்டார். இருப்பினும், யோசுவாவின் காலத்திற்குள் மோசே இப்பகுதி முழுவதையும் இஸ்ரவேலின் சுதந்தரமாக நியமித்திருந்தார். முடிந்தவரை விரிவாக இருக்க, நமது ஆசிரியர் 13:14 இல் ஒரு அடைப்புக்குறிப்பையும் சேர்த்தார். லேவியர்கள் சுதந்தரத்தைப் பெற்றார்கள், ஆனால் நிலத்தை விட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

”கர்த்தருக்கு நெருப்பினால் செலுத்தப்பட்ட காணிக்கைகள்” அவர்களுடையது என்று அவர் விளக்கினார்.

> யோசுவாவில் புவியியல் பற்றிய கேள்வி மிகவும் முக்கியமானது, நிலத்தின் எல்லைகள் மிக முக்கியமான கேள்வியாகும், குறிப்பாக மலைகள் தொடர்பானவை… அவர்கள் என்ன செய்கிறார்கள், பரிசுத்த பூமி என்னவாக இருக்கும் என்பதற்கான ஒரு எல்லையை அவர்கள் உருவாக்குகிறார்கள், அது இந்த அடையாளமாகவும், இந்த வழிப்புள்ளியாகவும் மாறுகிறது. இஸ்ரவேலின் வடக்கு முனை எர்மோன் மலையாகும், பாரம்பரியமாக இஸ்ரவேலின் கிழக்கு எல்லைகள் மலைகளால் உருவாக்கப்படுகின்றன, குறிப்பாக தெற்கில் ஏதோமும், பின்னர் மோவாபின் உயர்நிலங்களும், மலைகளும், பீடபூமிகளும், மலைநாடுகளும், மோவாப் மற்றும் பாசானும் உள்ளன. எனவே, நவீன யோர்தான் முழுவதும் அதாவது வடக்கு யோர்தான் முதல் தெற்கு யோர்தான் வரை இது தேசத்தின் கிழக்கு எல்லைகளை உருவாக்குகிறது.
>
> – Dr. டாம் பெட்டர்

இஸ்ரவேலினுடைய சுதந்தரத்தின் ஆரம்ப எல்லைகளின் அடிப்படை கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மனதில் கொண்டு, இந்த வசனங்களின் அசல் அர்த்தத்தைப் பற்றி கேட்கும் நிலையில் நாம் இருக்கிறோம். வரலாற்றின் இந்த கட்டத்தில் இஸ்ரவேலின் பரம்பரை பற்றிய ஒரு வரைபடத்துடன் நமது ஆசிரியர் தனது புத்தகத்தின் இந்த பிரிவை ஏன் தொடங்கினார்?

## அசல் அர்த்தம்

இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க, நியாயாதிபதிகள், முடியாட்சி மற்றும் பாபிலோனிய சிறையிருப்பின் நாட்களில், தேவன் அவர்களுக்கு வழங்கியிருந்த பிராந்தியங்களின் மீது கட்டுப்பாட்டைப் பெறவும் பராமரிக்கவும் இஸ்ரவேலர் போராடினர் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இஸ்ரவேலின் கோத்திரங்களுக்கிடையிலான மோதல்கள், இந்த நாடுகளுக்கு மற்ற ஜனங்களிடமிருந்து வந்த தொல்லைகள், வனாந்தரிர கோத்திரத்தாரின் தாக்குதல்கள், இறுதியில் எகிப்து, அசீரியா, பாபிலோன் போன்ற பெரிய பேரரசுகளின் பேரழிவுகரமான படையெடுப்புகள் ஆகியவை ஆபிரகாமுக்கு தேவன் வாக்குக் கொடுத்த தேசத்தின் மீதான இஸ்ரவேலின் பிடியை மீண்டும் மீண்டும் குறைத்தன.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இந்தப் பிரதேசங்களின் பரப்பளவை தனது வாசகர்களுக்கு நினைவூட்டுவதன் மூலம், இந்த நிலங்களின் மீது கட்டுப்பாட்டைப் பெறுவது அவர்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நமது ஆசிரியர் சுட்டிக்காட்டினார். அப்போதுதான் இஸ்ரவேல் மக்கள் அதிக நாடுகளைக் கைப்பற்றி உலக நாடுகள் அனைத்திற்கும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பரப்ப முடியும்.

இஸ்ரவேலினுடைய சுதந்தரத்தின் ஆரம்ப எல்லைகளை ஒருபோதும் மறக்கக்கூடாது என்று தனது வாசகர்களை நம்ப வைப்பதற்காக, நமது ஆசிரியர் தனது புத்தகத்தில் முன்னர் முன்னிலைப்படுத்திய ஐந்து கருப்பொருள்களையும் இந்த அத்தியாயங்களில் நெய்தார்.

## தெய்வீக அதிகாரம்

முதலாவதாக, தெய்வீக அதிகாரம் இஸ்ரவேலின் சுதந்தரத்தை எவ்வாறு நிறுவியது என்பதை அவர் சுட்டிக்காட்டினார். அவர் 13:1 இல் "கர்த்தர் [யோசுவாவிடம்] சொன்னார்" என்று யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் தனது கவனத்தை தொடங்கினார். "நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, நீ இஸ்ரவேலுக்குச் சுதந்தரமாகக் கொடுக்க கட்டளையிட்ட" என்று 13:6 இல், தேவன் யோசுவாவிடம் கூறினார். இதற்கு அப்பால், தெய்வீக அதிகாரம் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியில் இஸ்ரவேலினுடைய நிலங்களின் எல்லைகளையும் நிறுவியது. 13:8 இல் "கர்த்தரின் தாசனாகிய மோசே யோர்தானுக்கு அப்புறத்தில் கிழக்கே அவர்களுக்குக் கொடுத்தான்" என்று வாசிக்கிறோம்.

இந்த பிராந்தியங்களின் ஒரு பகுதியை மட்டுமே ஆக்கிரமிக்க இஸ்ரவேல் குடியேறுவது எவ்வளவு எளிது என்பதை யோசுவாவின் ஆசிரியர் அறிந்திருந்தார். எனவே, பிற்கால தலைமுறையினர் இந்த நிலங்களின் முழு பரப்பையும் சொந்தமாக்குவதற்கான பக்தியை இழந்தால், அவர்கள் தேவனுடைய அதிகாரத்திற்கும் அவரது அதிகாரபூர்வமான மனித பிரதிநிதிகளுக்கும் எதிராக திரும்புவார்கள் என்று அவர் தெளிவுபடுத்தினார்.

## தேவனுடைய உடன்படிக்கை

இரண்டாவதாக, யோசுவாவின் ஆசிரியர் இஸ்ரவேலினுடைய நிலங்களின் ஆரம்ப எல்லைகள் இஸ்ரவேலுடனான தேவனுடைய உடன்படிக்கையால் பாதுகாக்கப்பட்டன என்று குறிப்பிட்டார். யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியைப் பொறுத்தவரை, 13:6 இல் கானான் முழுவதும் இஸ்ரவேலுக்கு ஒரு "சுதந்தரம்" அல்லது "நாச்சலா" (தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) (נַחֲלָה) என்று தேவன் விளக்கினார். நாம் முந்தின பாடங்களில் கவனித்தபடி, இந்தப் பிராந்தியங்கள் இஸ்ரவேலின் சுதந்தரம் என்று அழைக்கப்பட்டன, ஏனென்றால் ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையில், தேவன் அவற்றை இஸ்ரவேலுக்கு நிலைத்திருக்கும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

சுதந்தரமாக வாக்குறுதியளித்தார். சீனாய் மலையில் மோசேயுடன் செய்த உடன்படிக்கையில் தேவன் இந்த வாக்குறுதியை உறுதிப்படுத்தினார். அதேபோல், 13:8 இல், யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியும் இஸ்ரவேலின் சுதந்தரம் என்று அழைக்கப்படுகிறது.

இந்த வழியில் தேவனுடைய உடன்படிக்கையில் கவனத்தை ஈர்ப்பதன் மூலம், நமது ஆசிரியரின் செய்தி சந்தேகத்திற்கு இடமின்றி இருந்தது. இஸ்ரவேலின் ஒவ்வொரு தலைமுறையும் இந்த நிலங்களின் மீதான இஸ்ரவேலின் உடைமையும் கட்டுப்பாடும் தங்கள் மூதாதையர்களுடனான தேவனுடைய பரிசுத்த உடன்படிக்கையால் நிறுவப்பட்டது என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

> ஆதியாகமம் புத்தகத்தில், தேவன் ஆபிரகாமுடன் ஒரு உடன்படிக்கை உறவை நிறுவும்போது, அவர் அவருக்கு நான்கு விஷயங்களை வாக்களிக்கிறார். வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போலவும், கடற்கரை மணலைப் போலவும் பல சந்ததியினரை அவர் வாக்களிக்கிறார். அவர் அவர்களைப் பாதுகாக்கப் போவதாக வாக்குறுதி அளிக்கிறார் - அவர் அவர்களின் தேவனாக இருக்கப் போகிறார், அவர் அவர்களுடன் இருப்பார், அவர் அவர்களை வளப்படுத்துவார். நிச்சயமாக, அவர்கள் எல்லா தேசங்களுக்கும் ஒரு ஆசீர்வாதமாக மாறுவார்கள் என்றும் அவர் உறுதியளிக்கிறார், யூத மக்களான எபிரெயர்கள் மூலம் மேசியா வருவார் என்ற மேசியா குறித்த வாக்குறுதியும் கொடுக்கப்படுகிறது. ஆனால் நான்காவதாக, பழைய ஏற்பாட்டில் தேவனுடைய ஜனங்கள் கானான் தேசத்தை உடைமையாக்கிக் கொள்வார்கள் என்று அவர் வாக்களிக்கிறார்… இது இஸ்ரவேல் மக்களுக்கு ஒரு பொதுவான வாக்குறுதி மட்டுமல்ல, தேவனுடைய குடும்பத்திற்குள் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட சுதந்தரம் உள்ளது என்பது கோத்திரத்தாருக்கு குறிப்பிட்டதாகும்.
>
> – Rev. கெவின் லாபி

## மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் தரநிலை

மூன்றாவதாக, இஸ்ரவேலின் ஆரம்ப எல்லைகளைப் பற்றிய விவரப்பதிவும், அவை மோசேயின் நியாயப்பிரமாணத்தின் தரத்திற்கு இசைவாக இருந்ததை வலியுறுத்தின. உதாரணமாக, யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியைப் பற்றிய பகுதியின் தொடக்கத்தில், தேவன் 13:1-ல், "சுதந்தரித்துக்கொள்ளவேண்டிய தேசம் இன்னும் மகா



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

விஸ்தாரமாயிருக்கிறது" என்று கூறினார். இது ஒன்றும் புதிய வெளிப்பாடு அல்ல. உபாகமம் 20:16,17 போன்ற வசனங்களில் மோசே இஸ்ரவேலருக்கு கட்டளையிட்ட பகுதிகளை அடிப்படையாகக் கொண்டதாக இது இருக்கிறது. அதே வழியில், யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதிக்கு வரும்போது, 13: 8 "மோசே அவர்களுக்குக் கொடுத்த அவர்களின் சுதந்தரம்" என்பதைக் குறிக்கிறது. மோசேயின் நியாயப்பிரமாணம் யோர்தானுக்கு அப்பால் உள்ள இந்த நிலங்களை எண்ணாகமம் 32:33-42 மற்றும் உபாகமம் 3:8-17 போன்ற பகுதிகளில் சுதந்தரித்துக் கொள்ள அனுமதித்தது.

யோசுவாவினுடைய புத்தகத்தின் ஆசிரியர் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் மீது கவனத்தை ஈர்த்தார், இஸ்ரவேலின் ஆரம்ப கோத்திர சுதந்தரங்களை உடைமையாக்கிக் கொள்ள வேண்டிய அவசியத்தை கேள்விக்குள்ளாக்கிய எவருக்கும் அவர் பேசினார். இந்தப் பகுதிகளை இஸ்ரவேலர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்படி மோசேயே கட்டளையிட்டிருந்தார்.

## தேவனின் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி

நான்காவதாக, இஸ்ரவேலினுடைய பிராந்தியங்களின் ஆரம்ப எல்லைகளை நம்முடைய ஆசிரியர் கையாண்டபோது, அவர் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியின் மீது கவனத்தை ஈர்த்தார். யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியைப் பற்றிய பகுதியில், தேவன் 13:6 இல், "நான் அவர்களை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் துரத்துவேன்" என்று கூறினார். யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியைக் கையாளும் அத்தியாயத்தில், இந்த நிலங்களை வைத்திருப்பது தேவன் மோசேக்கு வழங்கிய இயற்கைக்கு அப்பாற்பட்ட வெற்றிகளின் விளைவாகும் என்று அவர் குறிப்பிட்டார். 13:10 இல், "எமோரியரின் ராஜாவாகிய சீகோனுக்கு எதிரான நன்கு அறியப்பட்ட அதிசய வெற்றியை" அவர் குறிப்பிட்டார். 12 வது வசனத்தில், "பாசானில் ஒக்" மீது அற்புதமான வெற்றியை அவர் நினைவு கூர்ந்தார்.

இந்த இரண்டு சம்பவங்களும், தங்கள் சார்பாக தெய்வீக தலையீட்டில் தங்கள் நம்பிக்கையை வைக்க வேண்டும் என்பதை அசல் வாசகர்களுக்கு சுட்டிக்காட்டின. அப்போதுதான் அவர்கள் யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியிலும் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியிலும் தங்கள் பரம்பரைச் சுதந்தரத்தைப் பெறவும் தக்க வைத்துக் கொள்ளவும் யதார்த்தமாக நம்ப முடியும்.

## அனைத்து இஸ்ரவேலரும்

ஐந்தாவது இடத்தில், இஸ்ரவேலின் ஆரம்ப எல்லைகளின் பதிவும் அனைத்து இஸ்ரவேலின் பங்கேற்பையும் மையமாகக் கொண்டது. யோசுவா 13:7 யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதி "ஒன்பது கோத்திரங்களுக்கும் மனாசேயின் பாதி கோத்திரங்களுக்குமாக" பிரிக்கப்பட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வேண்டும் என்று குறிப்பிடுகிறது. யோசுவா 13:8 யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி ”மனாசே கோத்திரத்தின் மற்ற பாதி, ரூபனியர்கள் மற்றும் காத்தியர்களின் சுதந்தரம்” என்று குறிப்பிடுகிறது. அனைத்து இஸ்ரவேலின் கருப்பொருளை இன்னும் முன்னிலைப்படுத்த, 13:14 லேவி கோத்திரத்தின் சிறப்பு சுதந்தரத்தையும் குறிப்பிடுகிறது.

அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியபடி, நமது ஆசிரியர் தனது அசல் வாசகர்களுக்கு இஸ்ரவேலின் கோத்திரத்தார் ஒன்றாக நிற்க வேண்டும் என்பதை தெளிவுபடுத்தினார். யோர்தானின் இருபுறமும் உள்ள ஆரம்ப எல்லைகள் முழுவதும் தங்கள் இருப்பை நிலைநாட்ட தேவ மக்களின் ஒற்றுமை அவசியம்.

இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களின் ஆரம்ப எல்லைகளைப் பார்த்த பிறகு, இந்த பாடத்தில் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் சுதந்தரங்களின் குறிப்பிட்ட ஒதுக்கீடுகள் என்கிற நமது இரண்டாவது முக்கிய தலைப்புக்கு நாம் திரும்ப வேண்டும். இந்த நிலங்கள் எவ்வாறு பிரிக்கப்பட்டன?

# குறிப்பிட்ட ஒதுக்கீடுகள்

தனது புத்தகத்தின் இந்த பகுதியில், நமது ஆசிரியர் இஸ்ரவேலின் எல்லைகளை அடையாளம் காண்பதைத் தாண்டி, குறிப்பிட்ட கோத்திரத்தாருக்கு ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட பகுதிகளின் மீது கவனம் செலுத்தினார். நாம் பார்க்கப் போகிறபடி, இந்த ஒதுக்கீடுகள் சிக்கலானவை, ஏனெனில் சில கோத்திரத்தார் மற்றவர்களை விட பெரிய மற்றும் சிறந்த சுதந்தரத்தைப் பெற்றனர். நியாயாதிபதிகள், சாமுவேல், இராஜாக்கள் ஆகிய புத்தகங்கள், இந்த ஏற்றத்தாழ்வுகள் கோத்திரங்களுக்குள் எல்லா வகையான அவநம்பிக்கைக்கும், துர்ப்பிரயோகத்திற்கும், பிரிவினைக்கும், போருக்கும்கூட வழிநடத்தின என்று நமக்குச் சொல்வதில் ஆச்சரியமில்லை. இந்த வகையான தொல்லைகளைச் சமாளிக்க தனது ஆரம்ப வாசகர்களுக்கு உதவ, யோசுவாவின் நாட்களில் தேவன் நிறுவிய குறிப்பிட்ட கோத்திர ஒதுக்கீடுகளை மதிக்கும்படி நமது ஆசிரியர் அவர்களை அழைத்தார்.

இஸ்ரவேலினுடைய சுதந்தரத்தின் குறிப்பிட்ட ஒதுக்கீடுகளை நமது ஆசிரியர் நமது வழக்கமான வழியில் வழங்குவதைப் பார்ப்போம். முதலில், அதன் அடிப்படை கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை ஆராய்வோம், இரண்டாவதாக, அதன் அசல் அர்த்தத்தை ஆராய்வோம். யோசுவாவினுடைய இந்த பகுதியின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு முதலில் திரும்புவோம்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

# அமைப்பும் உள்ளடக்கமும்

13:15-21:45 இல் உள்ள இஸ்ரவேலின் குறிப்பிட்ட கோத்திர ஒதுக்கீடுகளின் பதிவு குழப்பமானதாக இருக்கலாம். அதில் மக்கள், பிராந்தியங்கள், பட்டணங்கள் மற்றும் கிராமங்களின் நீண்ட பட்டியல்கள் உள்ளன, இடையிடையே பல சுருக்கமான கதைகள் மற்றும் விரைவான தாக்குதல்கள் உள்ளன. இந்த அனைத்து வகைகளிலும் உள்ள முக்கிய கருத்துக்களைப் புரிந்துகொள்வதற்கு, இது இரண்டு முக்கிய பகுதிகளாகப் பிரிகிறது என்பதைக் காண உதவுகிறது; அவையாவன: யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியில் மோசே வழங்கிய கோத்திர ஒதுக்கீடுகள், 13:15-33, மற்றும் 14:1-21: 45 இல் யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் யோசுவா கொடுத்த கோத்திர ஒதுக்கீடுகளின் மிகப் பெரிய பதிவு.

யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியில் கோத்திர ஒதுக்கீடுகளின் பதிவு குறுகியதாகும். இது 13:15-23 இல் ரூபன் கோத்திரத்திலிருந்து தொடங்குகிறது. காத் கோத்திரம் 24-28 வசனங்களில் காணப்படுகிறது. யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியில் மனாசேயின் ஒதுக்கீட்டின் பாதி கோத்திரம் 29-31 வசனங்களில் பின்தொடர்கிறது. பின்பு, நம்முடைய ஆசிரியர் முந்தின பகுதியைப் போலவே இந்தப் பகுதியையும் 32,33 வசனங்களில் லேவி கோத்திரத்தின் விசேஷித்த சுதந்தரத்தைக் குறிப்பிட்டு முடித்தார்.

> லேவி கோத்திரம் இஸ்ரவேல் தேசம் முழுவதற்கும் ஆசாரியத்துவ சேவையை சேவித்து நிறைவேற்றிய கோத்திரமாக தேர்ந்தெடுக்கப்பட்டதால், அந்த கோத்திரத்திற்கு எந்த நில சுதந்தரமும் கிடைக்கவில்லை. யோசுவா 13 இல் தேவன் அவர்களின் சுதந்தரம் என்று கூறப்பட்டுள்ளது. இதன் காரணமாக, லேவி கோத்திரம் இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களிடையே ஒதுக்கீடுகளிலிருந்து விலக்கப்பட்டது, மேலும் லேவி கோத்திரம் பெற்ற பகுதி இஸ்ரவேலர்களால் செய்யப்பட்ட காணிக்கைகளான முழு இஸ்ரவேல் தேசமும் கொடுத்த பரிசுகள் மற்றும் தசமபாகங்கள் ஆகும்.
>
> – Rev. ஹென்றிக் துர்கானிக், மொழிபெயர்ப்பு

இந்த வசனங்களில், யோர்தானுக்கு கிழக்கே ரூபன், காத் மற்றும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தாருக்கு எந்தெந்த நிலங்கள் ஒதுக்கப்பட்டன என்பதை யோசுவாவின் ஆசிரியர் கவனமாக விவரித்தார். ஒரு பெரிய அளவிலான கண்ணோட்டத்தில், இந்த ஒதுக்கீடுகள் போதுமான அளவு தெளிவாகத் தோன்றலாம், ஆனால் இந்த கோத்திரத்தாருக்கு, பிரிவுகள் அவ்வளவு நேரடியானவை அல்ல. ஒன்றுடன் ஒன்று கவிந்திருக்கும் பிரதேசங்களும், எல்லைகள் குறித்த கருத்து வேறுபாடுகளும் குறிப்பிட்ட



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

பிரதேசங்கள், ஏன் நகரங்கள், கிராமங்கள் கூட யாரைச் சேர்ந்தவை என்பதை நமது ஆசிரியர் சற்று விரிவாக விளக்கினார்.

> நவீன கிறிஸ்தவர்கள் யோசுவாவின் புத்தகத்தில் 13-22 அதிகாரங்களைப் படிக்கும்போது, அவர்கள் உண்மையில் நம் கற்பனையைக் கைப்பற்றாத ஒன்றை எதிர்கொள்கிறார்கள், அது இந்த கோத்திரத்திற்கு வழங்கப்பட்ட எல்லைகளின் நீண்ட பட்டியல் ஆகும். கோத்திரத்தாருக்கு பல பட்டணங்களும் வழங்கப்பட்டன. உண்மையில், சில நேரங்களில் மக்கள் இவர்களை நவீன மனிதர்களாக படிக்கும்போது, அவர்கள் அதைப் பார்த்து, "உலகில் இதற்கும் மதத்திற்கும் என்ன சம்பந்தம்?" அல்லது "இதற்கும் நம்பிக்கைக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்கிறார்கள். யோசுவாவின் புத்தகத்தின் அசல் அமைப்பில், இது இஸ்ரவேலின் விசுவாசத்துடனும், தனிப்பட்ட கோத்திரத்தாராகவும், ஒன்றுபட்ட மக்களாகவும் தேவனுடன் அவர்கள் நடந்து செல்வதற்கும் பெரும் தொடர்பைக் கொண்டிருந்தது, ஏனென்றால் தேவன், ராஜாவாக, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரில் ஒவ்வொருவரும் உலகில் இருக்க வேண்டிய இடங்களில் கொடுத்தார் அல்லது ஒதுக்கினார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இது அவர்களின் நிரந்தர சுதந்தரமாகவும், அவர்கள் வைத்திருக்க வேண்டிய நோக்குநிலையாகவும், அவர்களின் தாயகமாகவும், முழு இஸ்ரவேல் தேசத்திற்கும் அவர்களின் தாயகத்தின் ஒரு பகுதியாகவும் இருக்க வேண்டும்.
>
> – Dr. ரிச்சார்ட் எல். ப்ராட், Jr.

இதைத் தொடர்ந்து, யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் யோசுவா செய்த குறிப்பிட்ட கோத்திர ஒதுக்கீடுகளைப் பற்றி நமது ஆசிரியர் மிக நீண்ட பதிவைக் கொடுத்தார். இந்த அத்தியாயங்கள் ஆறு முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன:

## தொடக்க சுருக்கம்

அவை 14:1-5 இல் யோசுவாவினுடைய செயல்களின் சுருக்கமான தொடக்க சுருக்கத்துடனும், மோசே ஏற்கனவே யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியில் செய்ததை அவை எவ்வாறு பிரதிபலித்தன என்பதுடனும் தொடங்குகின்றன. யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் யோசுவாவின் சுதந்தர நியமிப்புகள் தேவனுடைய சித்தத்தின்படி



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

இருந்தன என்பதையும் இந்தப் பகுதி ஒன்றுக்கும் மேற்பட்ட தடவைகள் குறிப்பிடுகிறது.

## நிறைவு சுருக்கம்

இந்த முதல் பகுதியின் சமநிலையில், யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒதுக்கீடுகளின் பதிவு 21:43-45 இல் இறுதி சுருக்கத்துடன் முடிவடைகிறது. 21:43 இல் எல்லா கோத்திரங்களும் ”அவர்கள் அவைகளைச் சுதந்தரித்துக்கொண்டு, அவைகளிலே குடியிருந்தார்கள்” என்று நமது ஆசிரியர் விளக்கினார். நிலைமை எவ்வளவு சிறந்தது என்பதை அவரது வாசகர்களுக்கு சுட்டிக்காட்ட, நமது ஆசிரியர் இந்த முழு பகுதியையும் 45 வது வசனத்தில் ”கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த நல்வார்த்தைகளிலெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை; எல்லாம் நிறைவேறிற்று” என்றார்.

> யோசுவா 13-22 இல், தேவனுடைய உடன்படிக்கை வாக்குத்தத்தங்கள் இஸ்ரவேலில் நிறைவேறியதை நாம் காண்கிறோம், ஏனென்றால் அந்த அத்தியாயங்களில் பன்னிரண்டு கோத்திரத்தாரில் பலருக்கு நில பங்கீட்டைக் காண்கிறோம். குறிப்பாக கவனிக்கத்தக்கது 21:45 ஆகும், தேவனுடைய வாக்குறுதிகளில் ஒன்று கூட தோல்வியடையவில்லை, தேவன் ஆபிரகாமுக்கு வாக்குறுதியளித்ததை வாசகருக்கு சுட்டிக்காட்டுகிறது, அவருக்கு ஒரு இடத்தைக் கொடுப்பேன், அவரை ஒரு ஜனமாக்குவேன், அவருடைய ஜனங்களிடையே இருப்பேன் என்பதாக நாம் காண்கிறோம். தேசம் முழுமையாக பிரிக்கப்படும்போது, ஆதியாகமம் 12 இல் தொடங்கி, நீண்ட காலத்திற்கு முன்பு தேவன் ஆபிரகாமுக்கு வாக்குறுதியளித்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் இஸ்ரவேல் இளைப்பாறுவதை இப்போது காண்கிறோம்.
>
> – Rev. மைக்கேல் ஜே. குளோடோ

## யூதா

இந்த இரண்டுக்கும் இடையில் நான்கு முக்கிய பிரிவுகள் நிற்கின்றன. அவை இஸ்ரவேலின் மிக முக்கியமான கோத்திரமான யூதாவிலிருந்து 14:6-15:63 இல் தொடங்குகின்றன. இந்த வசனங்களின்படி, யூதா ஒரு மிகப் பெரிய சுதந்தரத்தைப் பெற்றது, தெற்கே தென்புறம் மற்றும் ஏதோமின் எல்லை வரை நீண்டது. மேற்கே, எல்லை பெலிஸ்தியா தேசத்தை அடைந்து, மத்தியதரைக் கடலோரம் நெடுகிலும் எகிப்தின் நதி வரை நீண்டிருந்தது. இது மத்திய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தரைக்கடல் கடற்கரையோரமாக வடக்கு நோக்கி ”ஜெபுஸ்” என்று அழைக்கப்பட்ட எருசலேமுக்கு சற்று வடக்கே மற்றும் கிழக்கே சாவுக்கடல் வரை சென்றது.

நமது ஆசிரியர் ஏன் யூதாவின் ஒதுக்கீட்டை இந்த பட்டியலில் முதலிடத்தில் வைத்தார் மற்றும் யூதா எவ்வளவு பெற்றார் என்பதை எடுத்துக்காட்டினார் என்பது புரிந்துகொள்ளத்தக்கது. ஆதியாகமம் 49:8-12-ன் படி, யூதா இஸ்ரவேலின் ராஜ கோத்திரமாக இருக்க விதிக்கப்பட்டிருந்தது. முதலாவதாக, யூதாவை சேர்ந்த பிரபல போர்வீரனாகிய காலேபுக்கு வழங்கப்பட்ட நிலங்களைப் பற்றிய ஒரு சுருக்கமான விவரிப்பை வழங்குவதன் மூலம் நமது ஆசிரியர் யூதாவுக்கு வழங்கப்பட்ட மரியாதையை சிறப்பித்துக் காட்டினார். பின்னர், யூதாவின் பிராந்தியத்தில் சுமார் 126 பட்டணங்களையும் கிராமங்களையும் பெயரிட்டார்.

## எப்பிராயீம் / மனாசே

யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் யூதாவின் தெற்குப் பங்கீட்டைப் பற்றிய பதிவுக்குப் பிறகு, இரண்டாவது நீண்ட பதிவை நாம் காண்கிறோம். அதாவது, யோசேப்பின் குமாரர்களாகிய எப்பிராயீம், மனாசே ஆகியோரின் கோத்திரங்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கிய பங்கீடுகள் 16,17 அதிகாரங்களில் காணப்படுகின்றன.

எப்பிராயீமும் மனாசேயும் கானானின் வடக்குப் பகுதிகளில் ஏராளமான நிலங்களைப் பெற்றனர். யோர்தான் நதியிலிருந்து மத்தியதரைக் கடல் வரையிலும், எப்பிராயீம் மனாசேக்குத் தெற்காகவும் இருந்தது. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலேயே இந்தப் பிராந்தியங்கள் மிகவும் செழிப்பானவையாக இருந்தன. இது தவிர, மனாசே கோத்திரத்தில் பாதிக்கு ஏற்கனவே யோர்தானுக்கு கிழக்கே நிலம் வழங்கப்பட்டிருந்தது உங்களுக்கு நினைவிருக்கும்.

இஸ்ரவேலின் சுதந்தரத்தில் இவ்வளவு பெரிய மற்றும் வளமான பகுதியை வைத்திருக்கும் மரியாதையை இந்த கோத்திரத்தார் பெற்றதில் ஆச்சரியமில்லை. ஆதியாகமம் 48,49 விளக்குவது போல், எப்பிராயீமும் மனாசேயும் யோசேப்பின் குமாரர்கள் ஆவர். யோசேப்பு எகிப்தில் தேவனுக்கு அவ்வளவு உண்மையுள்ளவனாக இருந்ததால் மிகவும் கனப்படுத்தப்பட்டார். அவர் ரூபனுக்குப் பதிலாக யாக்கோபுக்கு முதற்பேறானவனாகவும், தனது இரண்டு குமாரர்கள் மூலமாகவும் முதற்பேறானவனின் இரட்டை சுதந்தரத்தைப் பெற்றார்.

> எனவே, எப்பிராயீமும் மனாசேயும் யோசேப்பின் குமாரர்கள் ஆவர். அவர்கள் யாக்கோபின் குமாரர்கள் அல்ல. யாக்கோபு தனது பெயரை இஸ்ரவேல் என்று மாற்றிய மனிதன் ஆவார். யாக்கோபுக்கு இந்த பன்னிரண்டு குமாரர்கள் இருந்தனர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> அவர்களில் ஒருவனாகிய யோசேப்பு எகிப்தில் அடிமையாக விற்கப்பட்டான். பின்னர் மற்றொருவர், லேவி, இஸ்ரவேல் மக்களின் முதற்பேறான அனைவருக்கும் பதிலாக லேவியின் கோத்திரத்தை தனக்காக எடுத்துக்கொள்ள கர்த்தர் முடிவு செய்தபோது, அவர் பன்னிரண்டு எண்ணிக்கையிலிருந்து விலக்கப்பட்டார்… பின்னர் யாக்கோபின் ஆசீர்வாதம், அவர் யோசேப்பின் குமாரர்களை ஆசீர்வதிக்கச் சென்றார், மேலும் அவர் எப்பிராயீம் மற்றும் மனாசே மீது தனது ஆசீர்வாதத்தை வெளிப்படுத்தினார், லேவி மற்றும் யோசேப்பின் எண்ணிக்கையில் அந்த இருவரும் இடத்தைப் பிடிப்பது போல் இருக்கிறது. பன்னிரண்டு கோத்திரத்தாரிடையே நிலத்தைப் பங்கிடும்போது, எப்பிராயீம் மற்றும் மனாசே ஒவ்வொருவரும் நிலத்தின் ஒதுக்கீட்டைப் பெறுகிறார்கள், யோசேப்பின் பிரதிநிதிகளாக அவரது குமாரர்களான எப்பிராயீம் மற்றும் மனாசே இருக்கிறார்கள்.
>
> – Dr. ஜேம்ஸ் எம். ஹாமில்ட்டன்

16-ம் அதிகாரம், யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள யோசேப்பின் எல்லா தேசங்களையும் பற்றிய சுருக்கமான கண்ணோட்டத்துடன் தொடங்குகிறது. பின்பு எப்பிராயீம் கோத்திரத்தைப் பற்றிய திட்டவட்டமான விவரங்களை அளிக்கிறது. இதைத் தொடர்ந்து, 17-ம் அதிகாரத்தில், கதை மனாசே கோத்திரத்திற்கு நகர்கிறது. எண்ணாகமம் 27-லிருந்து செலொப்பியாத்தின் குமாரத்திகள் தேசத்தைச் சுதந்தரித்த கதை இதில் அடங்கும். எப்பிராயீமும் மனாசேயும் அதிக எண்ணிக்கையில் இருந்ததால் ஏன் அதிக நிலத்தைப் பெற்றார்கள் என்பதற்கான யோசுவாவின் விளக்கத்துடன் இந்தப் பகுதி முடிவடைகிறது.

எப்பிராயீம் மற்றும் மனாசே கோத்திரங்களுக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் வியக்கத்தக்கது, ஏனென்றால் இந்த புத்தகம் எழுதப்பட்ட சமயத்திற்குள் இந்த கோத்திரங்கள் எல்லா வகையான தொல்லைகளையும் ஏற்படுத்தின. ஆனால் இந்த வரலாறு இருந்தபோதிலும், தேவன் யோசேப்பின் கோத்திரங்களை எவ்வாறு கனப்படுத்தினார் என்பதை இஸ்ரவேல் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று நமது ஆசிரியர் சுட்டிக்காட்டினார்.

## சிறு கோத்திரத்தார்

யூதா, எப்பிராயீம், மனாசே ஆகிய முக்கிய கோத்திரங்களுக்கு நில பங்கீடுகள் செய்யப்பட்டதைப் பற்றி பேசிய பிறகு, 18,19 அதிகாரங்களில் சிறு கோத்திரங்களின் பக்கம் நம் ஆசிரியர் திரும்பினார். அவர் 18:1-10 இல்

ஒவ்வொரு கோத்திரத்தின் பிரதிநிதிகளையும் இந்த நிலங்களை அளவிட யோசுவா எவ்வாறு அழைத்தார் என்ற விவரிப்புடன் தொடங்கினார். அவர் 19:49-51 இல் ஒரு கதையுடன் முடித்தார், ஏனெனில் கோத்திரத்தார் இந்த ஏற்பாடுகளை அங்கீகரித்தனர், ஏனெனில் அவர்கள் யோசுவாவுக்கு தனது சொந்த விசேஷித்த குடும்ப சுதந்தரத்தைக் கொடுத்தனர்.

இந்த ஆரம்ப மற்றும் இறுதி விவரிப்புகளுக்கு இடையில், பென்யமீன், சிமியோன், செபுலோன், இசக்கார், ஆசேர், நப்தலி, தாண் ஆகிய இஸ்ரவேலின் சிறிய கோத்திரங்களுக்கான ஒதுக்கீடுகளை நமது ஆசிரியர் பதிவு செய்தார். இந்த கோத்திரங்கள் சுதந்தரங்களைப் பெற்றாலும், யூதா, எப்பிராயீம் மற்றும் மனாசே அளவுக்கு அவர்கள் பெறவில்லை. மேலும், பிற்காலங்களில், இந்த சிறிய கோத்திரத்தார் தங்கள் நிலங்களை பராமரிப்பதில் சிரமங்களை எதிர்கொண்டனர். சிமியோனின் சுதந்தரம் உண்மையில் "யூதாவின் சுதந்தரத்தின் மத்தியில்" இருந்தது என்று நமது ஆசிரியரே 19:9 இல் குறிப்பிட்டுள்ளார், இது இறுதியில் சிமியோனை யூதாவுக்குள் ஒருங்கிணைக்க வழிவகுத்தது. மேலும் அவர் 19:47 இல் "தாண் புத்திரரின் எல்லை அவர்களுக்கு ஒடுக்கமாயிருந்தது" என்று குறிப்பிட்டார். இது நியாயாதிபதிகள் 18 இல் நாம் படிக்கும் ஒரு கதையாகும். இந்த நிலையற்ற தன்மைகளும், பிற நிலையற்ற தன்மைகளும் சிறு கோத்திர மக்களைத் தொந்தரவு செய்கின்றன என்பதை அறிந்திருந்த நமது ஆசிரியர், இந்த ஒதுக்கீடுகளை அங்கீகரிப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக எழுதினார்.

## லேவி

யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் யோசுவாவின் ஒதுக்கீடுகளில் 20, 21 அதிகாரங்களில் லேவி கோத்திரத்தைப் பற்றிய பதிவும் சேர்க்கப்பட்டுள்ளது. யோசுவாவின் ஆசிரியர் 20:1-9 இல் அடைக்கல பட்டணங்களின் பெயரைக் கூறி லேவி கோத்திரத்தைப் பற்றிய தனது பதிவைத் தொடங்கினார். யாத்திராகமம் 21:12-14 மற்றும் உபாகமம் 19:1-13 ஆகியவற்றின் படி, இந்த பட்டணங்கள் இஸ்ரவேலின் நீதிமன்றங்கள் தவறு செய்தவர்களை குற்றவாளிகளா அல்லது நிரபராதிகளா என்பதை தீர்மானிக்கும் வரை தற்செயலாக கொலை செய்தவர்களுக்கு பாதுகாப்பு வழங்கின. இதைத் தொடர்ந்து, 21-ஆம் அதிகாரத்தில், எண்ணாகமம் 35:6-34-ல் உள்ள மோசேயின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, பொதுவாக லேவிய பட்டணங்களை நமது ஆசிரியர் பட்டியலிட்டார்.

அடைக்கலப் பட்டணங்களும் லேவிய பட்டணங்களும் இஸ்ரவேல் தேசத்திலிருந்த மற்ற கோத்திரங்களுடைய பிராந்தியங்களில் சிதறிக்கிடந்தன. இது, தேவனுடைய சேவையில் ஒவ்வொரு கோத்திரத்தையும் வழிநடத்த லேவியர்களுக்கு உதவியது. துரதிர்ஷ்டவசமாக, இந்த ஒதுக்கீடுகள் சிக்கலான காலங்களில் எளிதில் மறக்கப்பட்டன. ஆனால் யோசுவாவினுடைய புத்தகத்தின் ஆசிரியர், லேவியரின் சேவை தேசத்தின் நலனுக்கு மிகவும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

முக்கியமானதாக இருந்ததால் வாசகர் அவர்களை நினைவில் வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த குறிப்பிட்ட கோத்திர ஒதுக்கீடுகளின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மனதில் கொண்டு, இந்த அத்தியாயங்களின் அசல் அர்த்தத்தை நாம் சுருக்கமாகக் கூற வேண்டும்.

# அசல் அர்த்தம்

இந்த அதிகாரங்களில் யோசுவாவின் ஆசிரியர் சேர்த்த புவியியல் நுட்பவிவரங்களை பாராட்டுவது தற்கால வாசகருக்கு பெரும்பாலும் கடினமாக இருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் தங்கள் ஆரம்ப தேசிய சுதந்தரத்தைப் பாதுகாக்க மட்டுமே அவர் அவர்களை அழைக்கவில்லை. ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் தேவன் நிறுவிய குறிப்பிட்ட அந்தஸ்தையும் வேறுபாடுகளையும் அங்கீகரிக்கவும், இதனால் அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தின் பரவலில் முன்னேற முடியும் என்றும் அவர் அவர்களை அழைத்தார்.

தனது வழக்கமான பாணியில், நமது ஆசிரியர் இஸ்ரவேலின் குறிப்பிட்ட கோத்திர ஒதுக்கீடுகள் பற்றிய தனது பதிவில் தனது ஐந்து தொடர்ச்சியான கருப்பொருள்களைப் பின்னினார்.

## தெய்வீக அதிகாரம்

முதலாவதாக, கோத்திரங்களுக்கிடையே நிலங்களைப் பகிர்ந்தளிக்கும் தெய்வீக அதிகாரத்தை அவர் வலியுறுத்தினார். யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியில் ஒதுக்கப்பட்ட நிலங்களைப் பற்றிய தனது பதிவில், நமது ஆசிரியர் நான்கு முறை குறிப்பிட்டார் (13:8,15,24 மற்றும் 29). இவை தேவனுடைய தெய்வீக அங்கீகாரம் பெற்ற தலைவரான மோசே அவர்களுக்கு வழங்கிய நிலங்களின் பிரிவுகளாகும்.

யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் கோத்திர ஒதுக்கீடுகளுக்குப் பின்னால் உள்ள தெய்வீக அதிகாரத்தையும் நமது ஆசிரியர் சுட்டிக்காட்டினார். அவரது தொடக்க சுருக்கத்தில், 14:1 இல்,"ஆசாரியனாகிய எலெயாசாரும், நூனின் குமாரனாகிய யோசுவாவும் இஸ்ரவேல் புத்திரருடைய கோத்திரப் பிதாக்களின் தலைவரும்" என்று எழுதி நிலத்தின் பங்கீடுகளை நிறுவின. 17:4 இல் எப்பிராயீம் மற்றும் மனாசே பற்றிய பதிவிலும் இதே கருத்தை அவர் கூறினார். 19:51 இல் சிறு கோத்திரங்களைப் பற்றிய அவரது விவாதத்திலும், 21:1 இல் லேவி கோத்திரத்தை அவர் நடத்தியதிலும் இதை மீண்டும் காண்கிறோம்.

இது தவிர, நமது ஆசிரியர் லேவி கோத்திரத்தின் சுதந்தரத்தை 20:1 இல் தனது வழக்கமான வழியில் "கர்த்தர் யோசுவாவை நோக்கி ..." என்று அறிமுகப்படுத்தினார். அசல் வாசகர்களில் எவருக்கும் இதன் தாக்கங்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தெளிவாக இருந்தன. இந்த குறிப்பிட்ட கோத்திர ஒதுக்கீடுகளில் அதிருப்தி என்பது தேவன் கட்டளையிட்டவற்றில் அதிருப்தி அடைவதற்கு சமமாகும்.

## தேவனுடைய உடன்படிக்கை

இரண்டாவதாக, யோசுவாவின் ஆசிரியர் இஸ்ரவேலின் குறிப்பிட்ட கோத்திர ஒதுக்கீடுகளைக் கையாண்டபோது, இந்த பிரிவுகள் தேவனுடைய உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டவை என்பதையும் அவர் வலியுறுத்தினார். நாச்சலா (தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) (*נַחֲלָה*) என்ற எபிரெய வார்த்தையைப் பயன்படுத்தி கோத்திரத்தாருக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் பகுதிகளை அவர்களின் "சுதந்தரம்" என்று ஆசிரியர் மீண்டும் மீண்டும் குறிப்பிட்டார். நாம் முன்பு குறிப்பிட்டபடி, இந்த வார்த்தை ஆபிரகாம் மற்றும் மோசேயுடனான தேவனுடைய உடன்படிக்கைகளுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டுள்ளது. 13:32 இல், அவர் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி நிலங்களை இஸ்ரவேலின் "சுதந்தரங்கள்" என்று அழைத்தார். 33 ஆம் வசனத்தில், லேவியர்களின் சிறப்பு பகுதியை அவர்களின் "சுதந்தரம்" என்று அவர் அடையாளம் காட்டினார். யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒதுக்கீடுகளின் தொடக்க சுருக்கத்தில், அவர் 14:1,2 மற்றும் 3 இல் "சுதந்தரம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தினார். 14:9,13 மற்றும் 15:20 ஆகிய வசனங்களில் யூதாவின் தேசம் ஒரு "சுதந்தரம்" என்றும் அவர் பேசினார். அவர் எப்பிராயீம் மற்றும் மனாசேவுடன் 16: 4 மற்றும் ஏழு முறை இதைக் கூறினார். மேலும் அவர் சிறு கோத்திரத்தாரின் ஒதுக்கீடுகளை "சுதந்தரம்" என்று பதினேழு முறை அழைத்தார். லேவி கோத்திரத்தைப் பற்றிய அவரது கடைசி கணக்கில், 21:3 இல், ஒவ்வொரு கோத்திரமும் எவ்வாறு பட்டணங்களையும் மேய்ச்சல் நிலங்களையும் லேவியருக்கு அவர்களின் "சுதந்தரத்திலிருந்து" கொடுத்தன என்பதைப் பற்றி பேசினார். இறுதியாக, இந்த பகுதியின் இறுதி சுருக்கத்தில், 21:43 இல், நமது ஆசிரியர் "தேவன் தங்கள் பிதாக்களுக்கு கொடுப்பதாக ஆணையிட்ட அனைத்து தேசங்களையும்" கொடுத்தார் என்பதாக எழுதினார். இந்த குறிப்புகள் அனைத்தும் இந்த குறிப்பிட்ட கோத்திர ஒதுக்கீடுகள் தேவனுடைய உடன்படிக்கையில் வேரூன்றியுள்ளன என்பதை தெளிவுபடுத்தின. யாராவது அவர்களைப் புறக்கணித்தால், அவர்கள் தங்கள் உடன்படிக்கை ஆண்டவராக தேவன் தம்முடைய ஜனங்களுக்கு அளித்த பரிசுத்த வாக்குறுதியை புறக்கணித்தார்கள் என்று ஆகும்.

## மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் தரநிலை

மூன்றாவதாக, இஸ்ரவேலின் திட்டவட்டமான கோத்திர ஒதுக்கீடுகளைப் பற்றிய தன் அறிக்கையில், யோசுவாவின் ஆசிரியர் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் தராதரத்திற்கு கீழ்ப்படிவதையும் அறிவுறுத்தினார். யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியை அவர்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கையாண்ட விதத்தில் இந்த வலியுறுத்தல் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது. அவரது ஆரம்ப சுருக்கம், 14:2 இல், யோசுவா ”மோசேயின் கையால் கர்த்தர் கட்டளையிட்டபடியே” செயல்பட்டார் என்று கூறுகிறது. 14:5 இஸ்ரவேல் ஜனங்கள் தேசத்தைப் பிரித்தார்கள் என்று ”கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே” சேர்க்கிறது. 17:4 இல், செலொப்பியாத்தின் குமாரத்திகள் ”கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டதை” முறையிட்டனர். லேவி கோத்திரத்தின் கணக்கு”மோசேயின் மூலம்” தேவன் அவர்களிடம் பேசியதை இஸ்ரவேல் பின்பற்ற வேண்டும் என்பதாக 20:2 இல் இருக்கிறது. மேலும், இறுதி சுருக்கத்தின்படி, 21:2,8 ல், லேவி கோத்திரத்திற்கு பட்டணங்கள் ”மோசேயின் மூலம் கட்டளையிடப்பட்டவை” என்று ஒதுக்கப்பட்டன.

இந்த அதிகாரங்களில் மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் தரத்திற்கு நமது ஆசிரியரின் வேண்டுகோள் தேசத்தின் இந்த பிரிவினைகளை கவனிக்கும்படி இஸ்ரவேலின் எல்லா தலைமுறையினரையும் அழைத்தது. அவற்றை மீறுவது அவருடைய மக்கள் மீது தேவனுடைய சாபங்களைக் கொண்டுவருவதாகும். அவற்றைக் கடைப்பிடிப்பது அவரது ஆசீர்வாதங்களைப் பெறுவதாகும்.

## தேவனின் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி

நான்காவதாக, இஸ்ரவேலின் குறிப்பிட்ட கோத்திர ஒதுக்கீடுகள் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையால் உறுதிப்படுத்தப்பட்டன என்பதையும் இந்த அதிகாரங்கள் ஒப்புக்கொள்கின்றன. யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியில் ஒதுக்கீடுகளின் பதிவு 13:10,27 இல் ராஜாவான சீகோனின் அற்புதமான தோல்வியைக் குறிப்பிடுகிறது. 13:22 இல் பிலேயாம் கொல்லப்பட்டதையும், 13:31-ல் பாசானில் ஒகுக்கு எதிரான வெற்றியையும் நாம் வாசிக்கிறோம். இந்த நிகழ்வுகள் அனைத்தும் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியில் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்பாட்டை நினைவுபடுத்தின.

கூடுதலாக, யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒதுக்கீடுகளைப் பற்றிய நமது ஆசிரியரின் பதிவு தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட ஈடுபாட்டைக் குறிக்க சீட்டுப்போடுவதைப் பற்றி மீண்டும் மீண்டும் குறிப்பிடுகிறது. எண்ணாகமம் 36:2 மற்றும் நீதிமொழிகள் 16:33 போன்ற பகுதிகள் விளக்குவது போல, சீட்டுப்போடுவது தேவன் தம்முடைய சித்தத்தை இஸ்ரவேலுக்கு அசாதாரணமாக வெளிப்படுத்திய வழிகளில் ஒன்றாகும். யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியின் தொடக்க சுருக்கம் 14:2 இல் சீட்டுப்போடுவதைக் குறிப்பிடுகிறது. சிறு கோத்திரத்தாருக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் பதினோரு முறை சீட்டுப் போடுதல் காணப்படுகிறது. 21:4,10 இல் இஸ்ரவேலரும் லேவி கோத்திரத்தின் சுதந்தரத்திற்காக சீட்டுப்போட்டனர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல்பாட்டை திரும்பத் திரும்ப கவனிப்பதற்கான நமது ஆசிரியரின் நோக்கத்தைப் புரிந்துகொள்வது கடினமல்ல. அசல் வாசகர்களின் உறுப்பினர்கள் இந்த கோத்திர ஒதுக்கீடுகளிலிருந்து விலகிச் செல்ல ஆசைப்பட்டிருக்கலாம். ஆனால் இந்த ஒதுக்கீடுகள் மீறப்படக்கூடாது என்பதை நமது ஆசிரியர் மீண்டும் மீண்டும் நிரூபித்தார், ஏனென்றால் தேவனே அவற்றை நிறுவினார்.

> யோசுவாவில் சுவாரஸ்யமானது என்னவென்றால், யாருக்கு என்ன நிலம் கிடைத்தது என்பதைப் பார்க்க அவர்கள் உண்மையில் சீட்டுப்போட்டார்கள், அது தேவனுடைய கைகளில் இருந்தது என்பதை இது காட்டுகிறது என்று நான் நினைக்கிறேன், எந்த சமத்துவமின்மையும் இருக்கப்போவதில்லை, யோசுவா யாருக்கு என்ன கிடைக்கும் என்பதைத் தேர்ந்தெடுப்பதில் கூட அது தேவனால் கொடுக்கப்பட வேண்டும் என நினைத்தார். சீட்டுப்போடுவதன் மூலம், மீண்டும், இது தேவனும் அவருடைய மக்களும், தேவன் தம்முடைய ஜனங்களுக்கு இதை நியாயமாகக் கொடுக்கிறார் என்ற முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுகிறது. இந்த மக்களின் சொத்துரிமையை தேவன் நிலைநிறுத்துவார், அவர்களுக்கு சுதந்தரம் மிகவும் முக்கியமானது என்ற கருத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். இந்த நிலம் போகாது என்பதும் சுவாரஸ்யமானது… இந்த நிலத்தை யாரும் நிரந்தரமாக இழக்க முடியாது, அவர்கள் தங்கள் நிலத்தை விற்றாலும் ஒரு யூபிலி வருடம் வருகிறது, அங்கு நிலத்தை திருப்பித் தர வேண்டும். எனவே, இவை அனைத்தும் இது தேவனிடமிருந்து கிடைத்த அவர்களின் சுதந்தரம் ஆகும், இது தேவனால் கொடுக்கப்பட்ட உரிமையாகும், தேவன் இந்த எல்லைகளை நிலைநிறுத்துகிறார், ”இது உங்கள் நிலம் அல்ல” என்று ஒரு ராஜா கூட வந்து சொல்ல முடியாது. ராஜாக்கள் முயற்சி செய்தார்கள், ஆனால் சட்டப்படி அல்ல, அவர்களால் அதைச் செய்ய முடியவில்லை, ஏனென்றால் அது அவர்களுக்கு தேவன் கொடுத்த பரிசு மற்றும் அவருடைய மக்களாகிய அவரிடமிருந்து அவர்களுக்கு கிடைத்த சுதந்தரமாகும்.
>
> – Dr. டி.ஜே. பெட்ஸ்

## அனைத்து இஸ்ரவேலரும்

ஐந்தாவதாக, புத்தகத்தின் முந்தைய அத்தியாயங்களைப் போலவே, இஸ்ரவேலின் குறிப்பிட்ட கோத்திர ஒதுக்கீடுகள் குறித்த இந்த



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அத்தியாயங்களும் அனைத்து இஸ்ரவேலையும் உள்ளடக்குவதை வலியுறுத்துகின்றன. யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியில் ஒதுக்கப்பட்ட நிலங்களின் பதிவேடு, யோர்தானுக்குக் கிழக்கே உள்ள ஒவ்வொரு கோத்திரத்திற்கும் நிலங்களைக் குறிப்பிடும் விதத்தில் இந்த அழுத்தத்தை நாம் காணலாம். யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் ஒதுக்கீடுகளின் பதிவு இதையே செய்கிறது. யூதா, எப்பிராயீம், மனாசே கோத்திரங்களுக்கு என்ன கொடுக்கப்பட்டது என்பதை மட்டுமல்ல, சிறிய கோத்திரத்தாருக்கு என்ன கொடுக்கப்பட்டது என்பதையும் அது அறிவிக்கிறது. இதற்கு அப்பால், லேவி கோத்திரத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட பட்டணங்களையுங்கூட அது குறிப்பிடுகிறது.

இஸ்ரவேலின் அனைத்து கோத்திரங்களுக்கும் நமது ஆசிரியரின் விரிவான கவனம், அனைத்து இஸ்ரவேலரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் வசிக்க வேண்டும் என்ற அவரது உறுதியான நம்பிக்கையை வலுப்படுத்தியது. நமது புத்தகம் எழுதப்பட்ட நேரத்தில், சில கோத்திரத்தார் மற்றவர்களால் உள்வாங்கப்பட்டனர். மற்ற இனக்குழுக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக எதிரிகளிடம் பிரதேசங்களை இழந்திருந்தன. அசீரியர்கள் வடக்கு ராஜ்யமான இஸ்ரவேலை அழித்த நேரத்திலும், பாபிலோனியர்கள் யூதாவை கைப்பற்றியபோதும், தேவனுடைய ஜனங்களில் ஒரு மீதியானவர்கள் மட்டுமே தங்கள் கோத்திர சுதந்தரங்களில் எஞ்சியிருந்தனர். ஆனால் நமது ஆசிரியர் ஒவ்வொரு இஸ்ரவேலரும் பாடுபட வேண்டிய ஒரு இலட்சியத்தை வலியுறுத்தினார். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் இஸ்ரவேல் முழுவதற்கும் அதன் நியாயமான பாகம் இருந்தது.

அவற்றின் சுதந்தரத்தின் ஆரம்ப எல்லைகள் மற்றும் குறிப்பிட்ட கோத்திரத்தாருக்கு குறிப்பிட்ட ஒதுக்கீடுகளை மதிப்பாய்வு செய்வதன் மூலம் யோசுவாவின் புத்தகம் இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களை எவ்வாறு கையாள்கிறது என்பதை ஆராய்ந்தோம். இப்போது, நமது பாடத்தின் மூன்றாவது முக்கிய படிக்குத் திரும்புவோம்: இஸ்ரவேலின் தேசிய ஒற்றுமை.

# தேசிய ஒற்றுமை

பல நூற்றாண்டுகளினூடே இஸ்ரவேல் கோத்திரங்கள் பிரிந்து ஒன்றுக்கொன்று எதிராகத் திரும்பின. கோத்திரங்கள் ஒரே ஜனமாக ஒன்றிணைந்தாலொழிய தேவனுடைய ராஜ்யத்தை விரிவுபடுத்துவதில் இஸ்ரவேல் முன்னேற முடியாது என்பதை நமது ஆசிரியர் அறிந்திருந்தார். இந்த பிரச்சனையை நிவர்த்தி செய்ய, யோசுவாவின் நாளில் கடுமையான மோதல் இஸ்ரவேலின் தேசிய ஒற்றுமையை அச்சுறுத்திய ஒரு காலத்துடன் நமது ஆசிரியர் தனது புத்தகத்தின் இந்த பிரிவை முடித்தார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நாம் பல முறை பார்த்தபடி, யோசுவாவின் புத்தகம் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி மற்றும் யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள இஸ்ரவேல் கோத்திரத்தாரிடையே நிலவிய ஒரு பெரிய, இயற்கையான பிளவின் மீது மீண்டும் மீண்டும் கவனத்தை ஈர்க்கிறது. யோசுவாவின் நாளில் இந்தப் புவியியல் பிரிவினை பிரச்சனைக்குரிய இடமாக இருந்தது, ஏனென்றால் யோர்தானின் இரு பக்கத்திலிருந்த கோத்திரங்களுக்கிடையில் ஏறக்குறைய போர் மூண்டது. எனவே, நமது ஆசிரியர் இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களைப் பற்றிய இரண்டாவது பிரிவை மூடியபோது, யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி மற்றும் யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள கோத்திரத்தாரை ஒற்றுமையாக இருக்க யோசுவா எவ்வாறு வழிநடத்தினார் என்பதை அவர் நினைவுகூர்ந்தார். அவருடைய ஆரம்பகால வாசகர் தங்கள் சொந்த நாளில் இதேபோன்ற பதட்டங்களை எவ்வாறு தீர்க்க வேண்டும் என்பதை இந்த நிகழ்வுகள் விளக்கின.

இந்த பிரிவின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை முதலில் பார்ப்பதன் மூலம் இஸ்ரவேலின் தேசிய ஒற்றுமையை ஆராயும்போது நமது அதே மாதிரியைப் பின்பற்றுவோம், பின்னர் அதன் அசல் அர்த்தத்தைப் பார்ப்போம். இந்த அத்தியாயத்தின் அமைப்பையும் உள்ளடக்கத்தையும் முதலில் கவனிக்கவும்.

## அமைப்பும் உள்ளடக்கமும்

அத்தியாயம் 22 இல் இஸ்ரவேலின் தேசிய ஒற்றுமை பற்றிய கணக்கு ஐந்து முக்கிய படிகளில் வெளிப்படும் ஒரு நேரடியான விவரிப்பாகும். இது 1-10 வசனங்களில் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியின் கோத்திரத்தாரால் ஒரு பலிபீடம் கட்டப்படும் வியத்தகு பிரச்சனையுடன் தொடங்குகிறது.

### பலிபீடம் கட்டுதல்

யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் இஸ்ரவேலர் வெற்றிபெற்ற பிறகு, யோசுவா ரூபன், காத் கோத்திரங்களையும் மனாசேயின் பாதிக் கோத்திரத்தையும் யோர்தானுக்குக் கிழக்கே இருந்த தங்கள் சுதந்தரங்களுக்குத் திரும்ப அனுப்பினார். தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும்படி அவர்களை எச்சரித்தார். யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியைச் சேர்ந்த பழங்குடியினர் பயணம் செய்கையில், யோர்தான் நதிக்குப் பக்கத்தில் ஒரு பெரிய, கம்பீரமான பலிபீடத்தைக் கட்டினார்கள். யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியின் கோத்திரத்தார் இதைக் கேள்விப்பட்டபோது, மோசேயின் கூடாரத்தில் கர்த்தருடைய பலிபீடத்திற்கு மாற்றாக பலிபீடம் எழுப்பப்பட்டதாக அவர்கள் கருதினர்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

## போர் அச்சுறுத்தல்

11-14 வசனங்களில் போர் அச்சுறுத்தலின் எழுச்சியுடன் கதையின் பதற்றம் அதிகரிக்கிறது. யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி கோத்திரத்தாரால் எழுப்பப்பட்ட பலிபீடம் இஸ்ரவேல் முழுவதிலும் தேவனுடைய கோபத்தைக் கொண்டுவரும் என்று பயந்து, யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதி கோத்திரத்தார் தாக்க திட்டமிட்டனர். ஆனால், போரைத் தவிர்க்கும் முயற்சியாக, அவர்கள் முதலில் எலெயாசாரின் குமாரன் பினெகாசின் தூதுக்குழுவையும் பத்து முக்கிய வீரர்களையும் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி கோத்திரங்களை எதிர்க்க அனுப்பினர்.

## மோதல்

நமது கதையின் நீண்ட திருப்புமுனை, 15-31 வசனங்களில், இந்த தூதுக்குழுவிற்கும் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி கோத்திரத்தாருக்கும் இடையிலான மோதலை அறிவிக்கிறது. புதிதாக கட்டப்பட்ட பலிபீடம் ஆசரிப்புக் கூடாரத்தில் மட்டுமே பலி செலுத்த வேண்டும் என்ற தேவனுடைய கட்டளையை மீறுவதாக தூதுக்குழு எச்சரித்தது. ஆனால் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதிச் சேர்ந்த தலைவர்கள் தாங்கள் பலியிடுவதற்காக தங்கள் பலிபீடத்தைக் கட்டவில்லை என்று உணர்ச்சிகரமாக விளக்கினர். மாறாக, மற்ற கோத்திரத்தார் தங்களை தேசத்திலிருந்து நிராகரிப்பார்கள் என்று அவர்கள் பயந்ததால், அது மற்ற கோத்திரத்தாருடனான அவர்களுடைய ஒற்றுமையின் அடையாளமாக இருந்தது. பதிலுக்கு, யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி கோத்திரத்தார் கர்த்தருக்கு துரோகம் செய்யவில்லை என்பதால் தூதுக்குழு மகிழ்ச்சியடைந்தது.

## அச்சுறுத்தல் நிறுத்தம்

32,33 வசனங்களில் போர் அச்சுறுத்தல் நிறுத்தப்பட்டவுடன் கதையின் வீழ்ச்சி நடவடிக்கை தோன்றுகிறது. தாங்கள் கற்றுக்கொண்டவற்றை தூதுக்குழு அறிவித்தது, யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியிலிருந்த கோத்திரத்தார் தேவனைத் துதித்தனர், உடனடியாக போரைப் பற்றி பேசுவதை நிறுத்தினர்.

## பலிபீடத்தின் பெயரிடல்

பின்னர் கதையினுடைய பதற்றத்தின் இறுதி தீர்மானம் 34 வது வசனத்தில் பலிபீடத்தின் பெயருடன் தோன்றுகிறது. யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி கோத்திரத்தார் தங்கள் பலிபீடத்திற்கு ”சாட்சி” என்று பெயரிட்டதன் மூலம் தங்கள் நோக்கங்களை நிரூபித்தனர். ”கர்த்தரே தேவன் என்பதற்கு நாமே சாட்சி” என்பது இதன் அர்த்தமாகும். இதைச் செய்வதன் மூலம், யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி கோத்திரத்தார் தங்கள்

கௌரவமான நோக்கங்களையும், ஆசரிப்பு கூடாரத்தில் மட்டுமே பலி செலுத்துவதற்கான அவர்களின் நோக்கங்களையும், இஸ்ரவேலின் தேசிய ஒற்றுமைக்கான அவர்களின் அர்ப்பணிப்பையும் உறுதிப்படுத்தினர்.

இஸ்ரவேலின் தேசிய ஒற்றுமை பற்றிய இந்த விவரிப்பின் அடிப்படை கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை மனதில் கொண்டு, அதன் அசல் அர்த்தம் குறித்து சில கருத்துக்களை நாம் செய்ய வேண்டும்.

## அசல் அர்த்தம்

நமது ஆசிரியர் தனது புத்தகத்தின் இந்த பிரிவை 22 ஆம் அத்தியாயத்தின் விவரிப்புடன் ஏன் முடித்தார் என்பதைப் பார்ப்பது கடினம் அல்ல. மோதலுக்கான மிகப்பெரிய சாத்தியக்கூறுகள் இருந்தபோதிலும், கோத்திரத்தார் எவ்வாறு தங்கள் ஒற்றுமையை பராமரிக்க முடிந்தது என்பதை இந்த கதை விளக்குகிறது. யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியின் கோத்திரத்தார் தேவனுக்கு எதிரான வெளிப்படையான கலகம் என்று அவர்கள் நினைத்ததற்காக யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியின் கோத்திரத்தாரைத் தண்டிக்க சரியாக தயாராக இருந்தனர். ஆனால் அவர்கள் நிலைமையை ஞானமாய் ஆராய்ந்து, தேவனுடைய ஆராதனையில் தங்கள் தேசிய ஒற்றுமையில் மகிழ்ச்சியுடன் களிகூரினார்கள். இஸ்ரவேல் கோத்திரங்களுக்குள் இதுபோன்ற சண்டைகள் எழும்பும்போதெல்லாம் ஆரம்ப வாசகர் பின்பற்றுவதற்கு இந்தச் சம்பவங்கள் ஒரு போக்கை வகுத்துத் தந்தன.

நமது ஆசிரியர் தனது புத்தகத்தில் பல முறை பார்த்த அதே ஐந்து கருப்பொருள்களைக் கவனிப்பதன் மூலம் எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்ட தேசிய ஒற்றுமை பற்றிய தனது கதையை வடிவமைத்துள்ளார் என்பதை நாம் காணலாம்.

### தெய்வீக அதிகாரம்

முதலாவதாக, தெய்வீக அதிகாரத்தின் கருப்பொருள் ஒரு பலிபீடத்தின் கட்டுமானத்தில் தோன்றுகிறது. 22:1 இல், தேவனால் நியமிக்கப்பட்ட தலைவரான யோசுவா தான் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியின் கோத்திரத்தாரை தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களுக்குத் திரும்புமாறு அழைத்தார் என்று நாம் அறிகிறோம். இதற்கும் மேலாக, போர் அச்சுறுத்தலின் எழுச்சியில், 13 வது வசனத்தில் தெய்வீகமாக நியமிக்கப்பட்ட ஆசாரியனாகிய எலெயாசாரின் குமாரனான அதிகாரியான பினெகாஸ், யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியிலிருந்து தூதுக்குழுவை வழிநடத்தினார் என்று பார்க்கிறோம்.

இந்த கதையில் தனது வாசகர்களின் கண்ணோட்டங்களை வடிவமைக்க நமது ஆசிரியர் யோசுவா மற்றும் பினெகாசின் மீது கவனத்தை ஈர்த்தார். கடந்த காலத்தில் நடந்த சம்பந்தமில்லாத சம்பவங்களின் பதிவாக இதை அவர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

கருதக்கூடாது. அதற்கு பதிலாக, தெய்வீகமாக நியமிக்கப்பட்ட அதிகாரிகளின் பங்கேற்பு இந்த நிகழ்வுகளை தங்கள் சொந்த நாளில் தேசிய ஒற்றுமையை நிலைநிறுத்த சரியான முறையில் பயன்படுத்த அழைத்தது.

## தேவனுடைய உடன்படிக்கை

இரண்டாவதாக, 22-ஆம் அதிகாரத்தில் உள்ள தேசிய ஒற்றுமையின் கதை தேவனுடைய உடன்படிக்கையையும் தொடுகிறது. இந்த கருப்பொருள் குறிப்பாக யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்து வந்த தூதுக்குழுவிற்கும் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியின் கோத்திரத்தாருக்கும் இடையிலான மோதலில் முன்னணிக்கு வருகிறது. 25,27 வசனங்களில் நாம் வாசிக்கிறபடி, யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியின் கோத்திரத்தார் மற்ற கோத்திரத்தாரிடம் "கர்த்தரிடத்தில் உனக்குப் பங்கில்லை" என்று சொல்வதை விரும்பவில்லை. "பங்கு" என்ற வார்த்தை எபிரெய வார்த்தையான (கெலேக் என்று தமிழில் ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) (חֵלֶק) கெலேக் என்பதை மொழிபெயர்க்கிறது. மேலும், யோசுவா 18:7 மற்றும் 19:9 போன்ற பத்திகள் விளக்குவது போல, நமது ஆசிரியர் (தமிழில் கெலேக் என்று ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) (חֵלֶק) கெலேக் ஐ "சுதந்தரம்" அல்லது (தமிழில் நகாலா என்று ஒலிபெயர்க்கப்பட்டுள்ளது) (נַחֲלָה) நகாலா என்ற வார்த்தையுடன் நெருக்கமாக இணைத்தார். இந்தத் தொடரில் நாம் பல முறை பார்த்தபடி, "சுதந்தரம்" என்ற வார்த்தை பொதுவாக ஆபிரகாம் மற்றும் மோசேயுடனான தேவனின் உடன்படிக்கைகளுடன் தொடர்புபடுத்தப்பட்டது. எனவே, யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி கோத்திரத்தார் யோர்தானுக்கு மேற்கே உள்ள கோத்திரத்தார் தங்கள் மூதாதையர்களுக்கு வழங்கப்பட்ட உடன்படிக்கை வாக்குறுதிகளின் முழு வாரிசுகளாக அவர்களை நடத்துவதை உறுதிப்படுத்த விரும்பினர்.

யோசுவாவின் ஆசிரியர் தனது அசல் வாசகர்களிடம் தேசிய ஒற்றுமைக்கான தனது அழைப்பை ஈர்க்க இந்த விஷயங்களில் கவனத்தை ஈர்த்தார். வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மேற்கு ஆகிய இஸ்ரவேலின் அனைத்து கோத்திரத்தாரும் இஸ்ரவேலுடனான தேவனுடைய உடன்படிக்கையில் வேரூன்றிய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் ஒரு பங்கைக் கொண்டிருந்தனர் என்ற உண்மையை தனது அசல் வாசகர்கள் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது என்று அவர் வலியுறுத்தினார்.

## மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் தரநிலை

மூன்றாவதாக, இஸ்ரவேலின் தேசிய ஒற்றுமையைப் பற்றிய நமது ஆசிரியரின் விவரமும் மோசேயினுடைய பிரமாணத்தின் தரத்தை சிறப்பித்துக் காட்டுகிறது. கதையின் தொடக்க கட்டத்தில், யோசுவா யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியின் கோத்திரத்தாரை 22:5 இல், "கர்த்தரின் தாசனாகிய மோசே உங்களுக்குக் கற்பித்த கற்பனையின்படியேயும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நியாயப்பிரமாணத்தின்படியேயும் செய்யும்படிமாத்திரம் வெகு சாவதானமாயிருங்கள்" என்று எச்சரித்தார். கோத்திரங்களுக்கிடையேயான மோதலில், யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதிலிருந்து வந்த தூதுக்குழு 19 வது வசனத்தில் எச்சரித்தது, "நீங்கள் நம்முடைய தேவனாகிய கர்த்தரின் பலிபீடத்தையல்லாமல் உங்களுக்கு வேறொரு பீடத்தைக் கட்டுகிறதினாலே, கர்த்தருக்கும் எங்களுக்கும் விரோதமான இரண்டகம் பண்ணாதிருங்கள்" என்று எச்சரித்தது. அவ்வாறு செய்வது மோசேயின் பிரமாணத்தை மீறுவதாகும். "கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுவதும், இன்று கர்த்தரைப் பின்பற்றாதபடிக்கு விலகுவதும், எங்களுக்குத் தூரமாயிருப்பதாக" என்று 29 ஆம் வசனத்தில், யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியின் கோத்திரத்தார் மோசேயின் சட்டத்தின் தரத்தை உறுதிப்படுத்தினர்.

மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் மீது நமது ஆசிரியர் கவனம் செலுத்தியது, தேசிய ஒற்றுமையைப் பின்தொடர்வதற்கான ஒரு முக்கியமான தகுதியை எழுப்பியது. அந்தத் தேசத்தின் ஒற்றுமையை நாடுவது அவருடைய வாசகருக்கு எவ்வளவு முக்கியமானதாக இருந்தபோதிலும், மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் சட்டங்களின்படி மட்டுமே அவர்கள் அவ்வாறு செய்ய வேண்டியிருந்தது.

## தேவனின் இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி

நான்காவதாக, தேசிய ஒற்றுமையின் கதையாடல் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியையும் நோக்கி கவனத்தை ஈர்க்கிறது. இந்த கருப்பொருள் குறிப்பாக யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்து வந்த தூதுக்குழுவிற்கும் யோரதானின் கிழக்கே உள்ள பகுதியின் கோத்திரத்தாருக்கும் இடையிலான மோதலில் தோன்றுகிறது. 17 ஆம் வசனத்தில், பேயோரில் இஸ்ரவேலர் பாவம் செய்தபோது, "கர்த்தருடைய சபையின்மேல் வாதை வந்தது" என்பதை யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியின் கோத்திரத்தாருக்கு நினைவூட்டுவதன் மூலம் அவர்களை சபிக்க தேவனுடைய வல்லமையைப் பற்றி தூதுக்குழு எச்சரித்தது. இதற்கு நேர்மாறாக, யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியினுடைய கோத்திரத்தாரின் விளக்கத்தைக் கேட்டவுடன், அவர் 31 வது வசனத்தில் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆசீர்வாதத்தை ஒப்புக்கொண்டார், "கர்த்தர் நம் மத்தியில் இருக்கிறார் என்பதை இன்று நாம் அறிவோம்" என்று அங்கு அவர் கூறினார்.

தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சாபங்களையும் ஆசீர்வாதங்களையும் பற்றிய இந்தக் குறிப்புகள், ஆரம்ப வாசகருக்கு அவர்களுடைய நாளில் தேசிய ஒற்றுமைக்கான அழைப்பு வெறும் மனித விவகாரம் அல்ல என்பதை நினைப்பூட்டின. யோசுவாவின் நாட்களைப் போலவே, அவர்களும் தேசிய ஒற்றுமையின் இலக்கைப் பின்தொடரும்போது



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அல்லது பின்தொடரத் தவறும்போது தேவனுடைய சாபங்களையும் ஆசீர்வாதங்களையும் அனுபவிப்பார்கள்.

## அனைத்து இஸ்ரவேலரும்

ஐந்தாவதாக, தேசிய ஒற்றுமை பற்றிய இந்த விவரிப்பு அனைத்து இஸ்ரவேலின் கருப்பொருளை முன்னிலைப்படுத்துவதைக் காண்பதில் நாம் ஆச்சரியப்படக்கூடாது. 3,7 மற்றும் 8 வசனங்களில் யோர்தானின் இருபுறமும் உள்ள இஸ்ரவேலர்களை "சகோதரர்கள்" என்று யோசுவா குறிப்பிடும்போது கதையின் முதல் படியில் தொனி அமைக்கப்பட்டுள்ளது. மோதலில், தூதுக்குழு 17,20 வசனங்களில், இஸ்ரவேலில் சிலரின் பாவம் இஸ்ரவேலின் முழு சபைக்கும் எதிராக தேவனுடைய கோபத்தை கொண்டு வரக்கூடும் என்பதை ஒப்புக்கொண்டது. 34 வது வசனத்தில், பலிபீடம் பெயரிடப்படும்போது இஸ்ரவேலினுடைய விசுவாச ஒற்றுமையின் அறிவிப்புடன் "கர்த்தர் தேவன் என்பதற்கு நாமே ஒரு சாட்சி" என்கிற முழு விவரிப்பும் முடிவடைகிறது.

யோசுவாவின் நாளில் இஸ்ரவேலின் கோத்திரங்களுக்கிடையேயான பதட்டங்கள் இஸ்ரவேலினுடைய கோத்திரத்தாரின் ஒற்றுமைக்கு ஆழமான அர்ப்பணிப்புகளின் காரணமாக தீர்க்கப்பட்டன என்பதை யோசுவாவின் ஆசிரியர் தெளிவுபடுத்தினார். தனது அசல் வாசகர்களை அவர்களின் நாளிலும் தேசிய ஒற்றுமைக்கான அதே அளவிலான அர்ப்பணிப்புக்கு அழைக்க அவர் இதைச் செய்தார்.

இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களைப் பற்றிய நமது ஆசிரியரின் கணக்கு நிலத்தின் ஆரம்ப எல்லைகள், இஸ்ரவேலின் கோத்திரத்தாருக்கு குறிப்பிட்ட சுதந்தர ஒதுக்கீடுகள் மற்றும் கோத்திரத்தாரிடையே தேசிய ஒற்றுமையை நிறுவுதல் ஆகியவற்றைக் கையாள்வதை நமது பாடத்தில் இதுவரை பார்த்தோம். இப்போது நாம் இந்த பாடத்தில் நமது புத்தகத்தின் இந்த பிரிவின் கிறிஸ்தவ பயன்பாடு என்கிற நமது கடைசி கருத்துக்கு திரும்ப வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

# கிறிஸ்தவ பயன்பாடு

யோசுவாவினுடைய புத்தகத்தின் இந்தப் பகுதியின் பல நுட்பவிவரங்கள் ஆரம்ப வாசகருக்கு மிகவும் நடைமுறையான வழிநடத்துதலை அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டன. தங்கள் மூதாதையர்கள் பெற்ற ஆரம்ப மரபுரிமைகளைப் பாதுகாப்பது அவரது வாசகர்களுக்கு எவ்வளவு முக்கியமானது என்பதை நமது ஆசிரியர் உரையாற்றினார். ஒவ்வொரு கோத்திரத்துக்கும் தேவன் கொடுத்த குறிப்பிட்ட ஒதுக்கீடுகளை அவர்கள்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

எவ்வாறு மதிக்க வேண்டும் என்பதை அவர் விளக்கினார். யோசுவாவின் நாளில் இஸ்ரவேலர் தேசிய ஒற்றுமையைக் காத்துக்கொண்ட விதத்தை பின்பற்றும்படி அவர் அவர்களுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால் இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களைப் பற்றிய இந்த நடைமுறை பாடங்களை நாம் எவ்வாறு நமக்குப் பொருத்துவது? எளிமையாகச் சொன்னால், யோசுவாவின் காலத்தில் என்ன நடந்தது என்பது கிறிஸ்துவில் அவருடைய மக்களுக்கு தேவனுடைய சுதந்தரத்தின் மிகப் பெரிய நிறைவேற்றத்தை நோக்கிய ஒரு படி மட்டுமே என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

கிறிஸ்து தனது ராஜ்யத்தின் மூன்று கட்டங்களில் இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களை எவ்வாறு நிறைவேற்றுகிறார் என்பதன் வெளிச்சத்தில் யோசுவாவின் இந்த பிரிவினையின் கிறிஸ்தவ பயன்பாட்டை நாம் கையாள்வோம்; அவையாவன: அவரது முதல் வருகையில் அதன் தொடக்கம், திருச்சபை வரலாறு முழுவதும் அதன் தொடர்ச்சி மற்றும் அவரது இரண்டாவது வருகையில் அதன் நிறைவு. கிறிஸ்துவின் ராஜ்யம் தொடங்கப்படுவதன் வெளிச்சத்தில் இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களை நாம் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதை முதலில் கவனிக்கவும்.

## ராஜ்யத்தின் தொடக்கம்

கிறிஸ்து தனது முதல் வருகையில் தனது மேசியா ராஜ்யத்தைத் தொடங்கியபோது, இஸ்ரவேல் நூற்றுக்கணக்கான ஆண்டுகளை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திலிருந்து வெகு தொலைவில் சிதறடித்திருந்தது. பாலஸ்தீனத்திற்குத் திரும்பியவர்களும் கூட ஒன்றன்பின் ஒன்றாக புறஜாதி தேசங்களின் கொடுங்கோன்மையின் கீழ் வாழ்ந்தனர். ஆனால், இஸ்ரவேலில் இருந்த விசுவாசிகள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் தங்கள் சுதந்தரத்தைத் திரும்பப் பெறுவதற்கான நம்பிக்கையை ஒருபோதும் இழக்கவில்லை. முழு உலகத்தையும் தங்கள் மேசியாவினுடைய ஆட்சியின்கீழ் கொண்டுவரும் வகையில் தங்கள் சுதந்தரம் விரிவடையும் அந்தக் காலத்துக்காக அவர்கள் ஆவலோடு எதிர்நோக்கினார்கள்.

> இஸ்ரவேலுக்கு ஒரு தேசத்தை தருவதாக தேவன் கொடுத்த வாக்குறுதி தோட்டத்திற்கு திரும்புகிறது. தோட்டத்தை மட்டுமல்ல, முழு பூமியையும் கீழ்ப்படுத்தும்படி தேவன் தோட்டத்தில் மனிதகுலத்திற்கு ஒரு கட்டளையைக் கொடுத்தார். எனவே, நிலத்தின் பரிசில் நாம் காண்பது, மீண்டும், முழு பூமியின் மீதும் ஆதிக்கம் செலுத்துவதற்கான வாக்குத்தத்ததின் எதிரொலி, தேவனுடைய ராஜ்யத்தின் எல்லைகளை பரப்புகிறது. சங்கீதம் 2 மற்றும் சங்கீதம் 72 இல் உள்ள தாவீதின் அரசாட்சியில் - "என்னைக் கேளும்,

> அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" - அல்லது இஸ்ரவேலின் பங்கு எல்லா தேசங்களுக்கும் ஒரு ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்ற ஏசாயாவின் தரிசனத்தில், "நான் உன்னை ஆசீர்வதிப்பேன், உன் மூலம் பூமியின் எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிப்பேன்" என்ற ஆபிரகாமிய உடன்படிக்கையை எதிரொலிக்கிறோம். எனவே, ஏசாயா 2 இல், தேசங்கள் இஸ்ரவேலுக்குள் ஒடும் என்றும் கிறிஸ்துவாகிய மேசியாவிடம் மக்களை எப்படி வழிநடத்துவார்கள் என்பதையும் வாசிக்கிறோம். எனவே, இயேசு வரும்போது அவருடைய ஊழியத்தில் நாம் காண்பது என்னவென்றால், அவர் இஸ்ரவேலை தேசங்களுக்கு ஒளியாக இருக்கும்படி மீட்டெடுக்கிறார். எனவே, "நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்று மத்தேயு சுவிசேஷத்தின் முடிவில் அவர் கூறுகிறார். பின்னர் அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தில் "நீங்கள் என் சாட்சிகளாக இருப்பீர்கள்" என்று மீண்டும் பார்க்கிறோம், இது ஏசாயா 43 ஐ எதிரொலிக்கிறது: "போய், எல்லா தேசங்களுக்கும் ஒரே இரட்சகர் ஒருவரே இருக்கிறார் என்று சொல்." எனவே, நிலம் என்பது முழு பூமியையும் குறிக்கிறது மற்றும் முழு பூமியின் மீதும் இருக்கிற தேவனுடைய ஆதிக்கத்தைக் குறிக்கிறது.
>
> – Dr. – Dr.கிரெக் பெர்ரி

இயேசுவின் முதல் வருகை இந்த நம்பிக்கையை நிறைவேற்றுவதற்கான ஒரு முக்கிய படியாக இருந்தது என்று புதிய ஏற்பாடு விளக்குகிறது. எபிரெயர் 1:2 விளக்குவது போல், தேவன் இயேசுவை "எல்லாவற்றிற்கும் வாரிசாக" நியமித்தார். "அன்றியும், உலகத்தைச் சுதந்தரிப்பான்" என்று ரோமர் 4:13 இல் பவுல் கூறுவதைப் போல இருக்கிறது. "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்" என்று கலாத்தியர் 3:29 போன்ற பகுதிகள் நமக்குச் சொல்கின்றன. ரோமர் 8:17 இன் வார்த்தைகளில், "நாம் பிள்ளைகளானால் சுதந்தரருமாமே; தேவனுடைய சுதந்தரரும், கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே" என்று வாசிக்கிறோம்.

இதன் காரணமாகவே யோசுவாவின் நாளில் ஒதுக்கப்பட்டிருந்த இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களின் எல்லைகள் முழுவதிலும் இயேசு ஊழியம் செய்தார் என்று நான்கு சுவிசேஷங்கள் அறிவிக்கின்றன. அவரும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

அவருடைய சீஷர்களும் யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதியின் வடக்கு மற்றும் தெற்கு பிராந்தியங்களில் ஊழியம் செய்தனர். மேலும், சில சமயங்களில், அவர்கள் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதியிலும் ஊழியம் செய்தனர். அதேசமயத்தில், இஸ்ரவேலின் கோத்திரங்களிலிருந்து உண்மையுள்ள மீதியானோரை இயேசு தம்மிடம் கூட்டிச் சேர்த்தார், அவர்கள் தம்முடன் பூமியைச் சுதந்தரிக்கப்போகிறார்கள். இதற்கும் அப்பால், புதிதாக பரமேறிய கிறிஸ்து இஸ்ரவேல் கோத்திரங்களின் பிரதிநிதிகளை எருசலேமில் கூட்டினார், அவர்கள் அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:5 நமக்குச் சொல்வது போல் "வானத்தின் கீழுள்ள ஒவ்வொரு தேசத்திலிருந்தும்" அவரைப் பின்பற்றத் தொடங்கினர்.

ஆனால் ஒட்டுமொத்தமாக, இஸ்ரவேலினுடைய சுதந்தரத்திற்கும் கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடக்கத்திற்கும் இடையிலான மிக முக்கியமான தொடர்பு பெந்தெகொஸ்தே நாளில் தொடங்கிய சபையின் மீதான பரிசுத்த ஆவியின் பொழிவு ஆகும். எபேசியர் 1:14 இல், அப்போஸ்தலனாகிய பவுல் பரிசுத்த ஆவியை "நமது சுதந்தரத்தின் உத்தரவாதம்" என்று குறிப்பிட்டார். 2 கொரிந்தியர் 1:22 மற்றும் 5:5 இல், பவுல் அவரை "ஒரு அச்சாரம்" என்றும் அழைத்தார். ஆனால் பவுல் ஏன் ஆவியானவரை ஒரு அச்சாரமாக அல்லது கிறிஸ்துவில் நமது எதிர்கால சுதந்தரத்தின் முதல் தவணையாக பார்த்தார் என்பதைப் புரிந்து கொள்ள, ஆதியாகமம் 1:2 இன் படி, ஆவியானவர் தான் ஆரம்பத்தில் சிருஷ்டிப்புக்கு ஒழுங்கைக் கொண்டு வந்தார் என்பதை நாம் நினைவுபடுத்த வேண்டும். ஏசாயா 44:3,4 போன்ற பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்கள், தேவனுடைய ஆவியானவர் மேசியாவின் நாட்களில் சிருஷ்டிப்பின் புதுப்பித்தலையும் கொண்டுவருவார் என்று விளக்குகின்றன. உண்மையில், கிறிஸ்துவின் தேவாலயத்திற்கு பரிசுத்த ஆவியின் வரம் இந்த புதுப்பிக்கப்பட்ட சிருஷ்டிப்பின் முன்னறிவிப்பாகும். கிறிஸ்துவின் வருகையில் எல்லாவற்றையும் முடிக்க நாம் காத்திருக்கும்போது, கிறிஸ்துவின் ராஜ்யத்தின் தொடக்கத்தில் வழங்கப்பட்ட நமது உலகளாவிய சுதந்தரத்தின் ஒரு பகுதி அவர் ஆவார்.

இந்த காரணத்திற்காக, யோசுவாவின் இந்த பகுதியில் மீண்டும் மீண்டும் தோன்றும் முக்கிய கருப்பொருள்கள் பரிசுத்த ஆவியில் நமது சுதந்தரத்தின் முன்னறிவிப்பைப் பற்றி சிந்திக்க நமக்கு வாய்ப்புகளைத் தருகின்றன. யோசுவா இஸ்ரவேலின் சுதந்தரத்தை வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் தெய்வீக அதிகாரத்துடன் விநியோகித்ததைப் போலவே, இயேசுவும் அவருடைய அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் ஆவியில் விசுவாசிகளின் சுதந்தரத்தை தெய்வீக அதிகாரத்துடன் விநியோகித்தனர். யோசுவாவினுடைய நிலங்களின் விநியோகம் தேவனுடைய உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டது போலவே, தேவனுடைய மக்களுக்கு பரிசுத்த ஆவியை இயேசு விநியோகித்தது கிறிஸ்துவில் புதிய உடன்படிக்கையின் நிறைவேற்றமாக இருந்தது. யோசுவாவின் கீழ் இஸ்ரவேலின் சுதந்தரம் மோசேயின்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

நியாயப்பிரமாணத்தின் தரத்திற்கு இசைவாக இருந்தது, மேலும் ஆவியின் விநியோகம் மோசேயின் காலத்திற்குப் பிறகு தேவனுடைய மேலதிக வெளிப்பாட்டின் வெளிச்சத்தில், மோசேயின் பிரமாணத்திற்கு கிறிஸ்துவின் பரிபூரண கீழ்ப்படிதலின் விளைவாகும். இஸ்ரவேலின் சுதந்தரம் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியைச் சார்ந்திருந்தது, இயேசுவின் முதல் வருகையின் போது, பரிசுத்த ஆவியின் விநியோகத்தில் இன்னும் பெரிய இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தி செயல்பட்டது என்பதை புதிய ஏற்பாடு தெளிவுபடுத்துகிறது. யோசுவாவின் நாளில் அனைத்து இஸ்ரவேலரும் சேர்க்கப்பட வேண்டும் என்ற இலட்சியம் ராஜ்யத்தின் தொடக்கத்தில் விரிவுபடுத்தப்பட்டது. இஸ்ரவேலின் உண்மையுள்ள மீதியானோர் மட்டுமல்ல, புறஜாதி விசுவாசிகளும் பரிசுத்த ஆவியானவரில் கிறிஸ்துவினுடைய சுதந்தரத்தின் வைப்பைப் பெற்றனர்.

இஸ்ரவேலினுடைய கோத்திர சுதந்தரங்களின் கிறிஸ்தவ பயன்பாடு கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடக்கத்தை நோக்கி நம்மை எவ்வாறு திருப்ப வேண்டும் என்பதைத் தொட்டபின், திருச்சபை வரலாறு முழுவதும் அவருடைய ராஜ்யத்தின் தொடர்ச்சிக்கு இது எவ்வாறு பொருந்தும் என்பதையும் நாம் பார்க்க வேண்டும்.

## ராஜ்யத்தின் தொடர்ச்சி

இயேசுவின் முதலாம் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடையில், கிறிஸ்து தம்முடைய ஆவியின் மூலம் வரவிருக்கும் உலகத்தைப் பற்றிய முன்னறிவிப்புகளுடன் தம்முடைய ஜனங்களை தொடர்ந்து ஆசீர்வதிக்கிறார். யோசுவாவினுடைய புத்தகம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தைப் பாதுகாப்பதன் மூலம் முன்னேற இஸ்ரவேலை அழைத்ததைப் போலவே, புதிய ஏற்பாடு பரிசுத்த ஆவியானவரில் முன்னேற நம்மை அழைக்கிறது. கலாத்தியர் 5:16-ன் படி நாம் "ஆவியில் நடக்க" வேண்டும், எபேசியர் 5:18-ன் படி "ஆவியால் நிரப்பப்பட வேண்டும்." கூடுதலாக, யோசுவாவின் அசல் வாசகர்கள் ஒவ்வொரு கோத்திரத்தின் குறிப்பிட்ட ஒதுக்கீடுகளை ஒப்புக் கொண்டதைப் போலவே, கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஆவியில் ஒருமனதுடன் ஒப்புக்கொள்ள வேண்டும். "இங்கே பலவிதமான வரங்கள் உண்டு, ஆனால் ஒரே ஆவியானவர்" என்று 1 கொரிந்தியர் 12:4 கற்பிக்கிறது. மேலும், யோசுவாவின் ஆரம்ப வாசகர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தின் சுதந்தரத்தில் ஒன்றாக வாழ்ந்தபோது ஒற்றுமையைத் தேட அழைக்கப்பட்டனர். மேலும், எபேசியர் 4:3-ல், அப்போஸ்தலனாகிய பவுல் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களை "ஆவியின் ஒற்றுமையைக் காத்துக்கொள்ள ஆர்வமுள்ளவர்களாக" இருக்க அழைத்தார்.

இந்த வெளிச்சத்தில், யோசுவாவின் இந்த பிரிவின் ஐந்து முக்கிய கருப்பொருள்களை நாம் சந்திக்கும் ஒவ்வொரு முறையும், நாம் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவுக்காக எவ்வாறு வாழ வேண்டும் என்பதை பகுத்தறிய



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

வாய்ப்புகள் உள்ளன. இஸ்ரவேலினுடைய சுதந்தரத்தின் பின்னால் உள்ள தெய்வீக அதிகாரத்தை யோசுவா ஒப்புக்கொண்டது போல, இந்த உலகத்தின் காரியங்களில் அல்ல, ஆவியில் நமது சுதந்தரத்தைத் தேடுவதன் மூலம் கிறிஸ்துவில் தெய்வீக அதிகாரத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இஸ்ரவேலரின் ஆரம்ப சுதந்தரத்திற்கான உரிமை தேவனுடைய உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டது என்பதால், கிறிஸ்துவில் புதிய உடன்படிக்கையின் காரணமாக மீட்பின் நாளுக்காக ஆவியானவர் நம்மை முத்திரையிடுகிறார் என்று நாம் உறுதியாக நம்பலாம். மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் தரத்திற்கு அடிபணிந்து இஸ்ரவேல் தங்கள் ஆரம்ப சுதந்தரத்தைப் பெற்றதால், புதிய ஏற்பாட்டு வெளிப்பாட்டின் வெளிச்சத்தில் மோசேயின் பிரமாணம் பயன்படுத்தப்படுவதைப் போல நாம் ஆவியின் சுதந்தரத்தில் வாழ்கிறோம். இஸ்ரவேலின் சுதந்தரம் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையால் வழங்கப்பட்டதால், நம்முடைய சுதந்தரம் தேவனுடைய ஆவியானவரின் வல்லமையால் ஊற்றப்படுகிறது. இஸ்ரவேலர் அனைவரும் தங்கள் தேசிய சுதந்தரத்தில் ஒரு பங்கைக் கொண்டிருந்ததால், பூமியின் ஒவ்வொரு கோத்திரத்திலிருந்தும் தேசத்திலிருந்தும் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் ஆவியில் ஒரே சுதந்தரத்தைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

இஸ்ரவேலினுடைய கோத்திர சுதந்தரங்களின் கிறிஸ்தவ பயன்பாடு கிறிஸ்து தம்முடைய ராஜ்யத்தின் தொடக்க விழாவில் என்ன செய்தார் என்பதையும், அவருடைய ராஜ்யத்தின் தொடர்ச்சியின் போது நமது தற்போதைய சூழ்நிலைகளையும் திரும்பிப் பார்ப்பது மட்டுமல்லாமல், அவருடைய ராஜ்யத்தின் முடிவில் நாம் பெறும் சுதந்தரத்திற்கான நமது நம்பிக்கையையும் பலப்படுத்துகிறது.

## ராஜ்யத்தின் நிறைவு

வெளிப்படுத்தின சுவிசேஷம் 21:1 இன் படி, இயேசு திரும்பி வரும்போது அவர் ”ஒரு புதிய வானத்தையும் புதிய பூமியையும்” ஆட்சி செய்வார் என்ற உறுதியான நம்பிக்கை உங்களுக்கும் எனக்கும் இருக்கிறது. பாவத்தால் விழுந்த சிருஷ்டிப்பு நெருப்பால் சுத்திகரிக்கப்படும், தீமை அகற்றப்படும், தேவனுடைய ராஜ்யம் சிருஷ்டிப்பு முழுவதும் நீட்டிக்கப்படும். ஆனால் இந்த புதிய படைப்பு கிறிஸ்துவுக்கு மட்டுமே சொந்தமானதாக இருக்காது. வெளிப்படுத்தின விசேஷம் 21:7-ல், ”ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்” என்று அந்த மகா நாளில் தேவன் அறிவிப்பார் என்று நாம் அறிகிறோம். தேவனுடைய ஜனங்களாக, புதிய சிருஷ்டிப்பு நமது நித்திய சுதந்தரமாக இருக்கும்.

> யோசுவாவின் புத்தகத்தில் தேசிய சுதந்தரம் என்ற கருப்பொருள் ஒரு முக்கியமான தலைப்பாகும், மேலும்



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

> இன்று கிறிஸ்தவர்களாகிய நமக்கு பல பயன்பாடுகளை இது கொண்டுள்ளது, ஏனென்றால் தேசத்தைக் குறித்த வாக்குத்தத்தம் யோசுவாவின் நாட்களில் ஓரளவு மட்டுமே நிறைவேறியது. அதாவது, யோசுவாவின் புத்தகத்தில் நாம் பார்க்கிறபடி, கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணின தேசம் கானான் தேசத்திற்குள் மட்டுப்படுத்தப்படவில்லை. ரோமர் 4:13 இல் நாம் அதைத்தான் வாசிக்கிறோம்: "உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது நியாயப்பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது." இங்கே பவுல் ஆபிரகாம் முழு உலகையும் சுதந்தரிப்பார் என்று கூறுகிறார் … இந்த வாக்குத்தத்தங்கள் புறஜாதியாருக்கும் நிறைவேறும், அவர்கள் மாம்சத்தில் ஆபிரகாமின் சந்ததியல்ல, ஆனால் ஆபிரகாமின் சந்ததியான கிறிஸ்துவை விசுவாசிப்பதன் மூலம் இந்த வாக்குத்தத்தங்களைப் பெறுகிறார்கள். எனவே, ஆபிரகாம் பெற்றதும், யோசுவாவின் நாட்களில் இஸ்ரவேல் பெற்றதும் தேவன் ஆபிரகாமுக்கு வாக்குறுதியளித்த, கிறிஸ்துவில் நிறைவேறிய, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் முழுமையாக நிறைவேறும் ஒரு பெரிய மற்றும் முழுமையான தேசத்தின் ஒரு சிறிய படமாகும். இறுதியில், கிறிஸ்து திரும்பி வரும்போது அவர் கானானில் ஆட்சி செய்வது மட்டுமல்லாமல், அவர் முழு பூமியையும் சுதந்தரித்து முழு பூமியையும் சுதந்தரிப்பார். புதிய பூமி மற்றும் புதிய வானங்கள் இருக்கும். நாம் கிறிஸ்துவுடன் என்றென்றும் ஆட்சி செய்வோம்.
>
> — Rev. ஷெரிஃப் ஜெண்டி, மொழிபெயர்ப்பு

இந்த காரணத்திற்காகவே, யோசுவாவினுடைய இந்த பிரிவின் ஐந்து முக்கிய கருப்பொருள்கள் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் முடிவில் நாம் வைத்திருக்கும் நம்பிக்கையை நோக்கி நம் கண்களைத் திருப்புகின்றன. யோசுவா தன் நாளில் செய்ததற்கு தெய்வீக அதிகாரம் உதவியதால், இயேசு மகிமையில் திரும்பி வரும்போது தேவனுடைய கட்டளையை பரிபூரணமாகவும் முழுமையாகவும் நிறைவேற்றுவார். இஸ்ரவேலின் சுதந்தரம் தேவனுடைய உடன்படிக்கையால் பாதுகாக்கப்பட்டதால், நமது இறுதி சுதந்தரம் கிறிஸ்துவில் உள்ள புதிய உடன்படிக்கையால் பாதுகாக்கப்படுகிறது. மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தின் தரத்தின்படி யோசுவா இஸ்ரவேலின் சுதந்தரத்தை விநியோகித்ததால், கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் கிறிஸ்துவின் சாயலுக்கு முழுமையாக ஒத்துப்போவார்கள்,



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.

மேலும் வரவிருக்கும் உலகில் எல்லா தெய்வீக வெளிப்பாட்டின் தரத்தையும் நிறைவேற்றுவார்கள். இஸ்ரவேல் அதன் சுதந்தரத்தை தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையின் விளைவாக பெற்றிருப்பதால், கிறிஸ்து திரும்பி வரும்போது தேவன் தம்முடைய வல்லமையை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வெளிப்படுத்துவார். இஸ்ரவேலின் சுதந்தரம் இஸ்ரவேல் முழுவதையும் உட்படுத்தியதுபோல, கிறிஸ்துவுக்குள்ளான ஒவ்வொருவரும் வரவிருக்கும் உலகத்தில் தங்கள் நித்திய சுதந்தரத்தைப் பெறுவார்கள்.

# முடிவுரை

இந்த பாடத்தில், யோசுவாவினுடைய புத்தகத்தின் இரண்டாவது பெரிய பிரிவில் இஸ்ரவேலின் கோத்திர சுதந்தரங்களை ஆராய்ந்தோம். யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதி மற்றும் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி இரண்டிலும் உள்ள இஸ்ரவேலின் நிலத்தை விவரிப்பதன் மூலம் இஸ்ரவேலினுடைய பரம்பரையின் ஆரம்ப எல்லைகளுக்கு நமது ஆசிரியர் எவ்வாறு முன்னுரிமை அளித்தார் என்பதை நாம் பார்த்தோம். யோசுவாவின் நாளில் யோர்தானுக்கு கிழக்கிலுள்ள பகுதி மற்றும் யோர்தானுக்கும் மகா சமுத்திரத்திற்கும் இடைப்பட்ட பகுதி ஆகிய இரண்டு இடங்களிலும் விநியோகிக்கப்பட்ட குறிப்பிட்ட கோத்திர ஒதுக்கீடுகளையும் நாம் கருத்தில் கொண்டோம். யோசுவாவின் நாளில் இஸ்ரவேல் எவ்வாறு ஒன்றுபட்டிருந்தது என்பதை விவரிப்பதன் மூலம் இஸ்ரவேலின் அனைத்து கோத்திரங்களுக்குள்ளும் தேசிய ஒற்றுமையை நமது ஆசிரியர் ஊக்குவித்தார் என்பதை நாம் பார்த்தோம். இறுதியாக, கிறிஸ்துவினுடைய ராஜ்யத்தின் தொடக்கம், தொடர்ச்சி மற்றும் நிறைவு ஆகியவற்றின் வெளிச்சத்தில் யோசுவாவினுடைய இந்த பிரிவின் கிறிஸ்தவ பயன்பாட்டைப் பார்த்தோம்.

யோசுவாவின் தலைமையின் கீழ் தேவன் சாதித்ததை உறுதிப்படுத்துவது எவ்வளவு முக்கியம் என்பதை யோசுவாவின் ஆசிரியர் தனது வாசகர்களுக்கு உணர்த்தினார். இன்று, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களைப் போலவே நாமும் செய்ய வேண்டும். இயேசு ஏற்கனவே நமது நித்திய சுதந்தரத்தைப் பெற்றுவிட்டார் என்பதை நாம் அறிவோம். நாளுக்கு நாள், பரிசுத்த ஆவியானவரில் இந்த சுதந்தரத்தின் முன்னறிவுடன் நாம் வாழ்கிறோம். கிறிஸ்து மகிமையில் திரும்பும் நாளுக்காக நாம் காத்திருக்கிறோம். அந்த நாளில், அவர் எல்லாவற்றிற்கும் வாரிசாக தனது சரியான இடத்தை எடுத்துக்கொள்வார், புது சிருஷ்டிப்பின் பெரிய சுதந்தரத்தை அவரை நம்பிய அனைவருக்கும் நித்தியமாக விநியோகிப்பார்.



வீடியோக்கள், வழிகாட்டிகள் மற்றும் வேறு பல ஆதாரங்களுக்கு Third Millennium Ministries (thirdmill.org) யைப் பார்வையிடவும்.